பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 தை 05, புதன்கிழமை 18.01.2017 கதிர் 74

## கிழக்கு 'எழுக தமிழ்' நிகழ்வுகளில் முஸ்லிம்களும்!

மட்டக்களப்பு, ஜன.18

தமிழ் மக்கள் பேரவையால் மட்டக்களப்பில் சனியன்று நடத்தப்படும் 'எழுக தமிழ்' நிகழ்வில் முஸ்லிம்களையும் இணைத்துச் செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான ரீ.வசந்தராஜா நேற்றுத் தெரிவித்தார். (மு)

# ஜெனீவாத் தீர்மானத்திலிருந்து இலங்கை விலகிவிட முடியாது!

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி18

**இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஜெனீவாத்தீர்மானத்திலிருந்து, இலங்கை அரசாங்கம் பின்வாங்க முடியாது. ஐ.நா. இந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் ஹுசைன், சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.**

கொழும்பைத் தளமாகக் கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் ஹுசைனை, கடந்த வாரம் ஜெனீவாவுக்குச் சென்று சந்தித்திருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போதே, ஐ.நா. மனித உரிமைகள்

பக்கம் 20 »




அப்ப.. தனுஷ்கோடி படகுச் சேவை தனியா நடக்குது போல...!

### சாட்சிகள் அச்சுறுத்தப்படுகின்றனர்

## போர்க்குற்ற விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம்

### திருகோணமலை ஆயர் வலியுறுத்து

கொழும்பு, ஜன.18

இலங்கையில் போர்க்காலக் குற்றங்களுக்குச் சாட்சி சொல்பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என திருகோணமலை ஆயர் மேதகு கலாநிதி நோயல் இம்மானுவேல் தெரிவித்தார்.

இதனால் இந்த விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம் என்றார் அவர்.

இலங்கையில் நல்லிணக்க வழிமுறைகள் குறித்த ஆலோசனைக்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு, அமைச்சர் மங்கள சமரவீரவிடம் அண்மை

பக்கம் 20 »

## எல்லை நிர்ணய அறிக்கை அமைச்சரிடம் கையளிப்பு

### விரைவில் அது வர்த்தமானியில்

எல்லை நிர்ணய இறுதி அறிக்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஐக்கிய தேசியகட்சிபிரதிநிதிசட்டத்தரணி மிஸ்பாஹ் சத்தார் நேற்று கையொப்பமிட்டுள்ளார். அதையடுத்தே அது நேற்று

பக்கம் 20 »

## சிங்களவருடன் இணைந்து வாழ்வதா என்று தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்தத் தயாரா?

### அரசுக்கு சவால் விட்டுக் கேட்கின்றார் சிறீதரன் எம்.பி.



கிளிநொச்சி, ஜன.18

இலங்கை அரசாங்கம் திணிக்கும் பௌத்த மேலாதிக்க சிந்தனையில் ஊற வைக்கப்பட்ட அரசியல் தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்காது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் சிங்கள மக்களோடு சேர்ந்து வாழத் தயாரா என அறியும் பொது வாக்கெடுப்பு ஒன்றை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடம் நடத்த அரசாங்கம் தயாரா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக

பக்கம் 20 »

## வன்னியிலிருந்து மற்றொருவர் கடல் வழியாகத் தமிழகத்துக்கு

### தனுஷ்கோடியில் நேற்றுக் கைது

சென்னை, ஜன.18

இலங்கையிலிருந்து கடல் வழியாகச் சட்டவிரோதமாகத் தமிழகம் சென்றடைந்த தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுத் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நான்கு நாள்களுக்கு முன்னர் இதேபோன்று மன்னார் பேசாலை வாசி ஒருவர் தனுஷ்கோடிப் பகுதியில் கைதுசெய்யப்பட்டமையை அடுத்து நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


பக்கம் 20 »


## இளம் தாய்க்கு 3 குழந்தைகள் யாழ். ஆஸ்பத்திரியில் பிரசவம்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரசவத்திற்காக சேர்க்கப்பட்ட கர்ப்பவதி ஒருவர் மூன்று குழந்தைகளைப் பெற்

பக்கம் 20 »





# ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியை எதிர்த்தவர்கள் இன்று அவருடன் நின்று நிபந்தனை போடுகின்றனர்

### அதனை ஏற்கவே முடியாது என்கின்றார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, ஜன.18

"ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவை எதிர்த்து அவரைத் தோற்கடிக்க முயன்றவர்கள் இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களாக வந்து நின்றுகொண்டு நிபந்தனைகளை விதிக்கின்றார்கள். அதனை ஏற்க முடியாது."

– இவ்வாறு கூறுகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

கொழும்புநாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அந்தப் பேட்டியில் –

"ஒற்றையாட்சி ஒன்றில் சு.க. பிடிவாதமாகவுள்ளது. பௌத்தத்துக்கு முதலிடம் கொடுப்பதில் எந்த விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என்றும் அது கூறுகின்றது. இந்த நிலையில் எவ்வாறு அதிகாரப் பகிர்வு சாத்தியமாகும்?" – என்று அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கையில் சுமந்திரன் கூறியவை வருமாறு:-

பக்கம் 20 »

காலைக்கதிர் Kalaikkathir



# வறட்சி நிலைமைகளை ஆராய்வதற்காக நேற்று கிளிநொச்சியில் விசேட கூட்டம்

## அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் பங்கேற்பு





கிளிநொச்சி, ஜன.18

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியினால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஆராய்வதற்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

வறட்சியினால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சரும், பதில் முதலமைச்சருமான பொ.ஐங்கரநேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

வறட்சியினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள் அழிவடைந்துள்ளநிலையில்எஞ்சிய வயல்களை எவ்வாறு பாதுகாப்பது? வறட்சியால் அடுத்துவரும் மாதங்களில் மக்கள் எதிர்கொள்ளவுள்ள உணவுத் தட்டுப்பாடு, தொழிலின்மை, சுகாதாரப் பிரச்சினைகள், குடிதண்ணீர்ப் பிரச்சினை, மின்சாரம், நன்னீர் மீன்பிடி பாதிப்பு போன்ற விடயங்கள் தொடர்பிலும் கால்நடைகள் மற்றும் வன விலங்களுக்கான குடிதண்ணீர் ஏற்பாடுகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டன.

மேலும், மேற்படி நெருக்கடிகளின் போது அதற்கான மாற்று நடவடிக்கைகளை எந்த நிறுவனங்கள் அல்லது திணைக்களங்கள் மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தவநாதன், பசுபதிப்பிள்ளை, மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-70)

## பள்ளிமுனையில் கஞ்சா மீட்பு

மன்னார், பள்ளிமுனை கடற்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த படகு ஒன்றில் இருந்து 45 கிலோ கஞ்சாவைக் கைப்பற்றிய கடற்படையினர் படகில் இருந்த இருவரைக் கைது செய்தனர் என்று கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் 25 மற்றும் 27 வயதுடைய இளைஞர்கள் என்றும், அவர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## கைதடி மாதர் சங்கத்திற்கு கதிரைகள் அன்பளிப்பு

கைதடி, ஜன.18

கைதடி தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மாகாண சபைநிதியில் இருந்து 111 பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி சரஸ்வதி முன்பள்ளியில் இடம்பெற்ற நிகழ்வில் கஜதீபன் கலந்துகொண்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவியிடம் கதிரைகளைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில், சங்கத்தின் செயற்பாடுகளில் திறமையாகச் செயற்பட்டவர்களுக்கான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தநிகழ்வில், சங்கத்தின் அங்கத்தவர்கள், பிரதேசமக்கள்எனப் பலர்கலந்துகொண்டனர். (ம-07)



## அத்துருகிரியவில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, அத்துருகிரியப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற அடையாளம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த 33 வயதுடைய இந்த இளைஞர் சிறையிலிருக்கும் மரண தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவின் சாரதி என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சுரேஷை நாடு கடத்துமாறு கனடா நீதிமன்றம் உத்தரவு



விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஈழத் தமிழர் ஒருவரை நாடுகடத்துமாறுகனேடிய நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாணிக்கவாசகம் சுரேஷ் எனப்படும் ஈழத் தமிழரே இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளார்.

குறித்த நபர் விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்தார் எனவும் தன்னார்வமாகவே விடுதலைப்புலிகள்அமைப்பில் ஈடுபட்டிருந்தார் என்றும் கனடாவின் குடிவரவு சபை குற்றம் சுமத்தியிருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இவர் மீது வழக்குத் தொடரப்பட்டு இவரை நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இக்குற்றச்சாட்டை சுரேஷ் இரண்டு தசாப்த காலங்களாக மறுத்து வாதிட்டு வந்துள்ளார்.

எனினும் மாணிக்கவாசகம் சுரேஷை நாடுகடத்துமாறு கனேடிய நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்து தீர்ப்பளித்துள்ளது.

## இலங்கையில் ஓரினத் திருமணம்: யோசனை ஜனாதிபதியால் நிராகரிப்பு!

இலங்கையில் ஓரினச் சேர்க்கை திருமணச் சட்டத்தை ஏற்படுத்தும் யோசனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யப்பா அபேவர்தன இது தொடர்பாகக் குறிப்பிட்டார்.

ஜி.பி.எஸ்.பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு பெற்றுக் கொள்வதற்கு முன்வைக்கப்பட்டுள்ள செயல் திட்டத்தி லேயே ஓரினச்சேரக்கை திருமண சட்டம் ஏற்படுத்துதல் தொடர்பான யோசனையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த செயல் திட்டத்தில் காணப்படும் யோசனைகளில் நாட்டில் நடைமுறைப் படுத்த முடியாத யோசனைகளைத் தவிர்க்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யப்பா அபேயவர்தன மேலும் தெரிவித்தார்.

## கிழக்கில் நடைபெறும் 'எழுக தமிழு'க்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவை ஆதரவு

### மக்களை அணிதிரண்டு கலந்துகொள்ள அழைப்பு

மட்டக்களப்பு ஜன.18

மட்டக்களப்பில் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள எழுக தமிழ் பேரணிக்கு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ள தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை, இந்த மக்கள் எழுச்சி நிகழ்வில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் அனைவரும் அணி திரண்டுசென்றுகலந்துகொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்புவிடுத்துள்ளஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

பிரிக்கப்படாத வட-கிழக்கு தமிழர் தாயகம், தமிழரின் இறைமை, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு என்பவற்றை வலியுறுத்தி தமிழ் மக்கள் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணியில் பங்குபற்றுவது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள நிலையில், தமிழ்மக்களின்அபிலாஷைகளை உலகுக்கு வெளிப்படுத்துவதற்காக இந்த எழுக தமிழ் பேரணி முக்கியத்துவம் பெறுகிறது.

நல்லிணக்கசெயற்பாடுகளில் தமிழ்மக்கள்நம்பிக்கை இழந்து வருகின்றனர். இலங்கை அரசின் அறிவிப்புக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. அதாவது, தமிழ் மக்களுக்கான தீர்வு சமஷ்டி முறையில் அமையாது, போர்க்குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பான விசாரணையில் சர்வதேச பங்களிப்புக்கு இடமில்லை, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு வாய்ப்பே இல்லை என இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே,தமிழ்மக்களும்தாங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை ஒன்றித்த குரலாக சர்வதேசத்துக்குமீண்டும்மீண்டும்தொடர்ச்சியாகஎடுத்துச்சொல்லவேண்டும்.

அடக்கப்பட்டு, ஒடுக்கு முறைகளுக்குள்ளாகி, இனஅழிப்பைச் சந்தித்த சமூகமொன்று தனக்கான விடுதலை பற்றி வெளியுலகுக்கு அதியுச்ச அளவில் அழுத்திச் சொல்லவேண்டிய தேவை உள்ளது. இதற்காக எழுக தமிழ் நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

எனவே, இப்பேரணியில் வடக்கு, கிழக்கிலுள்ள அனைவரும் பங்குபற்றி, ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-07)

## காரைநகர் பிரதேச செயலகத்தில் தேசிய நல்லிணக்க வார நிகழ்வு



தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வார நிகழ்வு கடந்த வாரம் காரைநகர் பிரதேச செயலகத்தில் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக ச.நிகேஸ் மற்றும் எஸ். முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டு உத்தியோகத்தர்களுக்கு நல்லிணக்கம் தொடர்பாக விளக்கமளித்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில், தேசிய நல்லிணக்கம் தொடர்பான பிரகடனத்தை உத்தியோகத்தர்கள் அனைவரும் வாசித்தனர். பின்னர் பிரதேச செயலாளர் நல்லிணக்கம் தொடர்பான விளக்க உரையொன்றை ஆற்றினார்.


தொடர்ந்து உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் தேசிய ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றினார். இறுதியாகக் குழுச் செயற்பாடு, பின்னூட்டல் என்பன இடம்பெற்றன.

யுத்தத்திற்கு பின்னரான நிலையில், நாட்டு மக்களிடம் நல்லிணக்கம் தொடர்பான புரிதல்களை ஏற்படுத்தும் நோக்குடன் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியாக இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# வவுனியா புதிய பஸ் நிலையத்தால் நேற்று நகரில் களேபரமான நிலை!

## போக்குவரத்துச் சபை – தனியார் துறையினர் சச்சரவு

## 4 மணி நேரம் குழப்பம்; மீண்டும் பழைய இடங்களில் சேவை







வவுனியா, ஜன.18

சுமார் 20 கோடி ரூபா செலவில் வவுனியாவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்திற்கு இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் செல்லாததால் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை சாரதி, நடத்துநர்களுக்கிடையில் நேற்று ஏற்பட்ட மோதல் காரணமாக வவுனியா நகரப்பகுதியில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு நான்கு மணிநேரம் பதற்ற நிலை நீடித்தது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, யாழ். வீதியில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் திறந்து வைத்திருந்தார். இப் புதிய பேருந்து நிலையத்தில் தமது சேவைகளை தனியார் பேருந்துகள் ஆரம்பித்திருந்தன. ஆனால் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திற்குச் செல்லாது தமது பழைய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபட்டன.

இந்நிலையில் புதிய பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றிய தனியார் பேருந்து ஒன்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து நிலையத்திற்கு வந்தபோது அதனை தடுத்து நிறுத்திய இலங்கை போக்குவரத்து சபை நடத்துநர் மற்றும் சாரதிகள் அதனை முற்றுகையிட்டனர். இதனையடுத்து அப்பகுதிகளில் முறுகல் நிலை ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் அத்தனியார் பேருந்தை அங்கிருந்து விடுவித்தனர்.

இந்த முரண்பாட்டை அடுத்து இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகளையும் புதிய பஸ் நிலையத்திற்கு வருமாறு கோரி தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், உரிமையாளர்கள் இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்து தரிப்பிடத்தின் முன்னால் கோசம் எழுப்பியவாறு முற்றுகையிட்டனர். இதன் போது இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டதால் அதைத் தடுக்கும் வகையில் தனியார் பேருந்துகளை கொண்டு வந்த சாரதிகள் ஏ9 வீதியின் குறுக்காகவும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து தரிப்பிட வாயில்களை மூடியும் தனியார் பேருந்துகளை நிறுத்தி இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவையை இடைநிறுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டு அங்கு நின்ற தனியார் பேருந்துகளை வெளியேற்றினர். அதை அடுத்து பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நிலைய வாயிலை மறித்து உட்கார்ந்தனர். இதன் காரணமாக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவை 4 மணி நேரம் தடைப்பட்டது.

இதன்போது இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் அவ்விடத்தில் நின்றே பயணத்தை தொடர வேண்டும் எனவும் புதிய பேருந்து நிலையத்திற்கு அவர்களை மாற்ற வேண்டாம் எனத் தெரிவித்து பேருந்து நிலையப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் இழுத்து மூடப்பட்டன. வர்த்தக சங்கத்தினரும் இலங்கை போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தனர்.

### பேருந்து மீது தாக்குதல்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் செல்லவந்த பேருந்தை அங்கு நின்ற இலங்கை போக்குவரத்து சபை நேரக்கணிப்பாளர் ஒருவர் செலுத்த முற்பட்டதால் குழப்பம் ஏற்பட்டது. இதன் போது அப்பேருந்தின் முன்பக்க கண்ணாடி தாக்குதல் காரணமாக உடைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தனியார் பேருந்து நடத்துநர் ஒருவரை கைது செய்தனர்.

இந்தநிலையில் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து கொழும்பு உள்ளிட்ட தூர இடங்களுக்கு புறப்பட்ட தனியார் பேருந்துகளை வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருச் சந்தியில் மறித்த இலங்கை போக்குவரத்து சபையினர் அதன் பயணத்தை தொடரவிடாது வீதிமறியலில் ஈடுபட்டனர். இதனால் வெளியிடங்களில் இருந்து வந்த பயணிகள், தூர இடங்களுக்கு செல்லவிருந்த பயணிகள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

நிலைமையை கட்டுப்படுத்த முடியாது திணறிய பொலிஸார் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்திற்கு இலங்கை போக்குவரத்துசபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் ஆகியோரை அழைத்து பேச்சு நடத்தியிருந்தனர். இதனையடுத்து நான்கரைமணி நேரத்தின் பின் முறுகல் நிலை முடிவுக்கு வந்தது.

வவுனியா நகரில் முன்னர் செயற்பட்டது போன்று இலங்கை போக்குவரத்து சபை தமது பேருந்து நிலையத்திலும் தனியார் பேருந்துகள் முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருவிலும் நின்று பயணத்தை தொடர்வதாக தீர்மானிக்கப்பட்டதையடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. பூட்டப்பட்ட வர்த்தக நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டன பழைய முறையில் போக்குவரத்து சேவையும் இடம்பெற்றது.

இதேவேளை, மோதல் நடைபெற்ற பகுதிக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார ஆகியோரும் வருகை தந்து நிலைமையை கட்டுப்படுத்த முயன்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-100)

# கடற்படையின் நூறாவது நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

## குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அமைக்கப்பட்டன

கொழும்பு, ஜன.18

யாழ். பொலிஸ் நிலையம் மற்றும் பதவிய ஊராவ கிராமம் ஆகிய இடங்களில் கடற்படையால் நிர்மாணிக்கப்பட்ட நூறாவது நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஊராவ கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் அந்தக் கிராமத்தைச் சூழவுள்ள 60 குடும்பங்கள் தூய குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளவுள்ளன.

இதேவேளை, யாழ் பொலிஸ் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் அந்தப் பொலிஸ் நிலையத்தில் உள்ள 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நன்மையடையவுள்ளனர் என்று கடற்படையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டம் சிறுநீரக நோய் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி மற்றும் பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றின் நிதி அனுசரணையின் கீழ் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டு மக்களுக்குத் தூய குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் இலங்கை கடற்படையின் சமூக நலத் திட்டத்தின் கீழ் இதுவரை நாடு முழுவதும் 100 குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றால் சுமார் 46 ஆயிரத்து 70 குடும்பங்கள் மற்றும் 40 ஆயிரத்து 350 பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோர் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# உடுவில் மான்ஸ் பாடசாலை மாணவர் 16 பேருக்கு புத்தகப்பை

உடுவில், ஜன.18

செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் உடுவில் மான்ஸ் த.க பாடசாலையில் தரம் 1இல் இணைந்து கொண்டுள்ள 16 மாணவர்களுக்கு இலவச புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

அதிபர் இரா.ஜெயக்குமாரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று கடந்த வெள்ளிக்கிழமை இவை வழங்கப்பட்டன. கடந்த வருடமும் இப் பாடசாலையில் பயிலும் வறிய மாணவர் 30 பேருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் புத்தகப் பைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(இ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk

தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk

விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## சீர்திருத்த முயற்சி சீரழிவை நோக்கி....!

அரசமைப்பை மாற்றியமைத்தல் என்ற பிரதான வாக்குறுதியோடு அதிகாரத்துக்கு வந்த 'நல்லாட்சி' அரசு, அதனைச் செய்யவும் முடியாமல், கைவிடவும் முடியாமல் தடுமாறுகின்றது.

நாடாளுமன்றக் கட்டமைப்புக்குள் நான்கு தரப்புகள் இந்த விடயத்துக்காக இழுபறிப்பட்டுக் கொண்டு நிற்கின்றன.

நல்லாட்சி அரசை அமைத்திருக்கும் தரப்புகள் இரண்டு. ஒன்று - ஐக்கிய தேசியக் கட்சி. அடுத்தது - அதனுடன் கூட்டுச் சேர்ந்து நல்லாட்சி அரசை அமைத்திருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

தமிழர் தரப்பு - பிரதானமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - மூன்றாவதாக உள்ளது.

நான்காவது - சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருப்பதாகக் கூறிக்கொண்டு கூட்டு எதிரணியை உருவாக்கியிருக்கும் தரப்பு. இதற்கு உத்தியோகப்பற்றற்ற ரீதியில் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

புதிய அரசமைப்பைப் பொறுத்தவரை இந்த நான்கு தரப்புகளுக்கும் நான்கு வெவ்வேறு நோக்கங்கள் பிரதானமானவை.

எப்படியாவது அரசமைப்பு மாற்றம் மூலம் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை எட்டிவிடுவது என்ற முயற்சியில் தமிழ்க் கூட்டமைப்பு முக்குகின்றது. எவ்வளவு விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு விட்டுக் கொடுத்து, எதையாவது தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுக்கலாம் என்ற நப்பாசை அதற்கு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் ஒரே நோக்காக நிற்கின்றது ஐ.தே.கட்சி. இந்த ஆட்சிமுறைமையைக் கொண்டு வந்ததே அந்தக் கட்சிதான். ஆனால், கடந்த 22 வருடங்களாக அந்த ஜனாதிபதிப் பதவி சிறிலங்கா சுதந்திரக் கட்சி வசம்தான் இருக்கின்றது. எனவே,அதனை மாற்றினால் மட்டுமே, முழு அதிகாரமும் தங்கள் கைக்கு வரும் என ஐ.தே. கட்சி கருதுகின்றது.

ஆட்சியில் பங்குதாரராக இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடோ இரண்டுங் கெட்டான் நிலைமையாக இருக்கின்றது.

ஒரு புறம் ஆட்சியையும் அதிகாரத்தையும் ஐ.தே.க. தட்டி, முழுமையாகப் பறித்து விடுமோ என்ற அச்சம். மறுபுறம் கூட்டு எதிரணி என்ற பெயரில் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் மஹிந்தர் அணி காலை வாரி ஆட்சியிலும், அதிகாரத்திலும் இருந்து துரத்தி விட்டு, கட்சித் தலைமையையும் பிடுங்கிக் கொண்டுவிடுமோ என்ற பீதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சு.கவுக்கு.

பிரதான கூட்டு எதிரணியின் போக்கும், நோக்கும் சூத்திரமும், சூழ்ச்சியும் வேறானவை. புதிய அரசமைப்பு மூலம் தமிழர்களுக்கு ஏதும் நியாயம் செய்யப்படுமானால், அதைப் பேரினவாத நோக்கில் கிளறி, ஊதிப்பெருப்பித்து, இனவாதத்தைக் கிளப்பி, அதன் மூலம் ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றுவது அதன் பிரதான இலக்கு.

அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுவதை இன்றைய சூழலில் அதுவும் விரும்புகின்றது.

கூட்டு எதிரணியைப் பொறுத்தவரை இன்று அத்தரப்பிடம் இருக்கும் ஒரே துரும்புச் சீட்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். அவரைச் சுற்றிப் பின்னப்பட்ட அரசியல் கட்டமைப்புத்தான் கூட்டு எதிரணி. அவர் எப்படியும் மீண்டும் அதிகாரத்துக்கு வருவார், அதன் மூலம் தாங்கள் அரசியலில் உயரலாம் என்றுதான் அவரைச் சூழ நிற்கும் அரசியல்வாதிகளும், அரசியல் தலைமைகளும் எண்ணிச் செயற்படுகின்றனர். அது வெளிப்படையானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை நீடிக்கும் வரை, மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக வரமுடியாது. அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதிப் பதவியில் இரண்டு பதவிக் காலத்தை முடித்தவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் போட்டியிட முடியாது. ஜனாதிபதியாக வரவும் முடியாது.


எனவே, தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை தொடரும்வரை ஆட்சித் தலைவராக மஹிந்தர் வரமுடியாது. ஆகக் கூடியது அடுத்த நிலையில் பிரதமராகத்தான் வரமுடியும். அச்சூழலில், அவருக்கு மேல் பிறிதொருவர் முழு அதிகாரத்துடன் இருப்பார் என்பது உறுதி.

அத்தகைய நிலைமை நீடிக்கும் வரை சு.கவில் தனது தலைமைப் பதவிக்குச் சவால் வராது என மைத்திரிபால சிறிசேன எண்ணுகின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டால், அதிகாரம் மிக்க பிரதமர் பதவிக்கு - நாட்டின் தலைமைப் பொறுப்புக்கு - மஹிந்த ராஜபக்ஷவும் வருவதற்கு வாய்ப்புண்டு.

அத்தகைய நிலை ஏற்படுமானால், சு.கவில் தற்போது மைத்திரிக்குப் பின்னால் நின்றபடி அதிகாரத்தை ருசித்துக் கொண்டிருப்பவர்கள் கூட மஹிந்தரின் பின்னால் ஓடிவிடுவர் என்பது மைத்திரி அணிக்குப் புரிகிறது. அதனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கைவிடாமல் தொடரவும், 2020 இற்குப் பிறகும் மைத்திரியே ஜனாதிபதி என்பதை உறுதிப்படுத்தவும் அந்தத் தரப்பு முயல்கின்றது.

இவ்வாறு பல நோக்குக் கொண்ட தரப்புகளின் சூழ்ச்சிச் சிந்தனைகள், இலக்குகளுக்குள் சிக்கி, அரசமைப்புச் சீர்திருத்த முயற்சி சீரழிகின்றது. அந்த எத்தனம் முன்நகரும் என்பதற்கான நம்பிக்கையைத் தருவனவாக, அரசியல் களநிலைமைகள் இல்லை என்பதே யதார்த்தமாகும்.




## மண்டைதீவில் உல்லாசக் கடற்கரை இயற்கைக் காட்சிகள் கொண்ட இடத்தில் !

### வேலணைப் பிரதேச சபை நடவடிக்கை

மண்டைதீவு, ஜன.18

யாழ்.நகருக்கு மிக அண்மையில் உள்ள மண்டைதீவு கிராமத்தின் மணல் கடற்கரை ஓரமாக 'உல்லாச கடற்கரை' அமைக்க வேலணை பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மண்டைதீவு கிராமத்தின் முன்னரங்க வெளிகளைச் சார்ந்து இலங்கை ஒலிபரப்புச் சேவை நிலையம் இருந்த பகுதியின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் இந்த உல்லாச கடற்கரை அமையவுள்ளது.

மணல் கடற்கரை, மனதிற்கினிய கடற்பகுதி தாவரங்கள், மான் ஓடை என்ற கடல் ஓடை, பனையடிகாட்டு பனைகள், பருவ கால உல்லாசம் தேடும் சைபீரிய பறவைகள் என, கடல் காற்று வீசும் இயற்கை எழில் கொண்ட இந்த இடம் இதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

இதற்கான நிதி, நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கான ஒலிபரப்பு கூட்டு தாபன நிலைய வீதி செம்மைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வீதித்திருத்த வேலைக்கு ஐம்பது லட்சம் ரூபா வேலணை பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்டிருப்பதாக அந்த வீதித் திருத்த வேலை மேற்பார்வையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் உள்ள 'வீரசுமண' கடற்படைத்தளத்தின் துணை கடற்படை முகாமும் உள்ளது. இந்த தளத்துக்கு படையினரின் உறவினர்களும் வந்து போகின்றனர் என்று கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-20)

## கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய மாணவரை இணைக்கும் நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம்

கொழும்பு, ஜன.18

கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய மாணவர்களை உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வு அடுத்த வாரம் ஆரம்பிக்கப் படும் என்று கல்வியமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவுக்கான ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் நேர்முகத்தேர்வுகள் இடம்பெறவுள்ளனஎன்றுகூறப்படுகின்றது.

அத்துடன், இந்த முறை நேர்முகத் தேர்வு தேசிய மட்டத்தில் நடைபெறும் என்றும் இதற்காக சுமார் 30 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளுக்கு இம்முறை 4 ஆயிரம் மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். இதேவேளை, ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரிய பயிற்சிக்கு மாணவர்கள் அதிகமாக உள்வாங்கப்படவுள்ளனர் என்று ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவுக்கான ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கு, கிழக்கில் முன்வைக்கப்படும் அரசின் அபிவிருத்தித் திட்டங்கள்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முக்கியமாக வடக்கு, கிழக்குக்கு அபிவிருத்தித் திட்டங்கள் அரசால் அதிக அளவில் முன் வைக்கப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்னாள் அரச உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகளுக்கும் உலக வங்கியின் உறுப்பினர்களுக்குமிடையில் வடமாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அரச அதிபர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சமூக அமைப்புகளுக்கு ஊடாக மக்களின் தேவைகள், அவர்களின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்த முடியும்.

இந்த வகையில் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் உலக வங்கி கலந்துரையாடலில் ஈடுபட்டது.

தங்களுடைய மக்களை எவ் விடயங்களில் முன்னிலைப் படுத்த வேண்டும் அவர்களுக்கான தேவைகள் என்ன என்பது பற்றி சிவில் சமூக பிரதிநிதிகள் விளக்கினார்கள்.

இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம், வடக்கில் உள்ள பிரச்சினைகளை அரசுக்கு முன்னிலைப்படுத்துவதே ஆகும்.

எதிர்காலத்தில் திட்டங்களை முன்வைத்து அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்ல இது உதவியாக அமையும்.

இதனை உலக வங்கியினர் முன்னிலைப்படுத்தி வடக்கில் உள்ள பிரச்சினைகள் பற்றி அரசிடம் முன்வைப்பார்கள்.

யுத்தத்துக்குப் பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட, முக்கியமாக வடக்கு, கிழக்குக்கு அபிவிருத்தி திட்டங்கள் அரசால் அதிகமாக முன்வைக்கப்படுகின்றன.- என்றார். (ஐ)

## நாளை

19.01.2017

வியாழக்கிழமை

நட்சத்திரம்: சித்திரை முழுவதும்

திதி: ஸப்தமி மாலை 5.31 வரை

சுபநேரம் : 8.05 – 9.35 வரை

இராகுகாலம் : 2.05 – 3.35வரை

காலைக்கதிர்
Kalaikkathir



# வரிச் சலுகைக்காக படையினரை சிறையில் அடைக்க வேண்டாம்!

## அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன.18

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைத் திட்டத்தை பெற்றுக் கொள்வதற்காகப் படையினரைச் சிறையில் அடைக்க வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யுத்தக் குற்றச் செயல்களின் அடிப்படையில் படையினர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வரிச் சலுகையை பெற்றுக் கொள்வதற்காக பயங்கரவாதத்தை இல்லாதொழித்த படையினரைத் தண்டிக்க வேண்டுமா?.

கலப்பு நீதிமன்றமொன்றை அமைத்து விசாரணை நடத்துவதாக உறுதியளித்து இந்த வரிச் சலுகைத் திட்டம் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியமை நியாயமற்றது.

அனைத்து யுத்தங்களும் கொடூரமானவை. பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட வேண்டும். நல்லிணக்கத்துக்குத் தயார். எந்தவொரு பிரஜையினதும் உரிமைகள் முடக்கப்படவில்லை என்று அரசு சர்வதேச சமூகத்துக்கு அறிவிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராகச் செயற்படவுள்ளேன்.

ஹெல உறுமய கட்சியின் உறுப்பினரான நான் இன்றிலிருந்து (நேற்று முன்தினம்) எந்தவொரு கட்சிக்கும் உரித்தானவன் அல்ல.- என்றார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே இந்த விடயங்களை அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஜாதிக ஹெல உறுமய கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவளித்த அவர், கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மற்றுமோர் உறுப்பினரான சம்பிக ரணவக்கவுடன் அந்த அரசிலிருந்து விலகி நல்லாட்சி அரசுக்கு ஆதரவு வழங்கினர்.

அதன் பின்னர் கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறையிலிருந்து தப்பிக்க முயன்ற துமிந்தவின் வழக்கு விசாரணை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தார் எனசுமத்தப்பட்டுள்ள வழக்குத் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் படுகொலை தொடர்பில் துமிந்தசில்வா உள்ளிட்ட சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக்குழு தலைவர்களில் ஒருவரான தெமட்டகொட சமிந்த, துமிந்த சில்வா உள்ளிட்ட ஐந்து பேர் வெலிக்கடை சிறையிலிருந்து தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்தனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்கு மூலம் ஒன்றை அளிக்குமாறு வெலிக்கடைசிறைச்சாலை பொறுப்பதிகாரிக்கு கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடங்களுக்குப் பொறுப்பான சிறைச்சாலை அதிகாரியையும் புலனாய்வுப் பிரிவில்முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுர துஸாச டி மெல், சிறிநாயக்க பதிரனலாகே சமிந்த ரவி ஜயனாத், கோவில்லே கெதர திஸாநாயக்க முதியன்சே லாகே சரத் பண்டார, சீ.எம். பிரியந்த ஜனக பண்டார மற்றும் அருமதுர லோரன்ஸ் ரெமோலோ துமிந்த சில்வா ஆகியோர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தனர் என புலனாய்வுப் பிரிவு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தச் சந்தேக நபர்கள் சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தனர் என்று இலத்திரனியல் ஊடகங்களில் வெளியான தகவல்களின் அடிப்படையில் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கைதிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், கைதிகளை அவர்களது உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பதற்குச் செய்யப்பட்டுள்ள ஒழுங்குகள், கைதிகள் தப்பிச் செல்ல முயற்சித்தனர் என்பது குறித்து சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் தகவல் வழங்கினார்களா போன்றன குறித்து சிறைச்சாலை அதிகாரிகளிடம் விசாரணை நடத்த அனுமதியளிக்குமாறு நீதிமன்றிடம் புலனாய்வுப் பிரிவினர் கோரியிருந்தனர்.

1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கக் குற்றவியல் சட்டத்தின் 124 ஆம் சரத்தின் அடிப்படையில் நீதிமன்றில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் விசாரணை நடத்த அனுமதியளித்துள்ளது.

இதேவேளை, புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்டசப் இன்ஸ்பெக்டர் எம்.ஏ.எஸ் ரஞ்சித் இது குறித்த விடயங்களை நீதிமன்றுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தன்னை நிரபராதி எனக் கூறும் நாமல் ராஜபக்ஷ!

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் புறக்கணிக்கவோ அல்லது அதனை அவமதிக்கவோ இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலையானபோதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்து, தான் நிரபராதி என்று கூறியுள்ளார். முறைகேடான வழியில் பணம் பெற்றமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது காணப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாகப் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினர் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்த வழக்கு விசாரணை உயர் நீதிமன்றில் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினமும் விசாரணை நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் மற்றும் நீதியரசர்களான புவனேக அலுவிஹார ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மன்றில் முன்னிலையாகியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தாம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உத்தரவுகளை அவமதிக்கும் வகையில் செயற்படவில்லை என்று மன்றில் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகச் சத்திய உரை அல்லது வாக்கு மூலம் அளிப்பதற்கு லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு செல்வதற்குத் தாம் தயாராக இருக்கிறார் என்றும் நாமல் ராஜபக்ஷ இதன்போது கூறியுள்ளார். (ஐ)

# ஈரான் மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய விருப்பம்

கொழும்பு, ஜன.18

ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் மற்றும் எரிபொருள்களுடன் சம்பந்தப்பட்ட பொருள்களை மீண்டும் இறக்குமதி செய்ய இலங்கை விருப்பம் கொண்டுள்ளது என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.




ஈரான் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் மொகமட் ஜவாட் ஷரீப்பை அமைச்சர் தெஹ்ரானில் சந்தித்துள்ளார்.

நிதி தொடர்பில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின்னர் இரண்டு நாடுகளும் எரிசக்தி தொடர்பில் கூட்டாகச் செயற்படுவதற்கும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானுக்கெதிராக விதிக்கப்பட்டிருந்த தடைகளால் ஏற்பட்டிருந்த பிரச்சினையின் காரணமாக இலங்கைக்கான ஏற்றுமதியில் தடைகள் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜூன் மாதத்துக்கு முன்னர் தேர்தல்கள் இல்லை

## தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜன.18

எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் எந்தவொரு தேர்தலையும் நடத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தேர்தலும் குறிப்பிட்ட தினத்துக்குள் நடத்தப்படாதுவிட்டால் அது ஜனநாயக விரோதச் செயலாகிவிடும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கலந்துகொண்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பு - இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எந்தவொரு தேர்தலும், குறிப்பிட்ட தினத்துக்குள் நடத்தப்படாதுவிட்டால் அது ஜனநாயக விரோதச் செயல் என்பதை இதற்கு முன்னரும் உத்தியோகபூர்வமாக நாம் கூறியுள்ளோம்.

ஜனநாயகத்துக்கு ஏற்படும் பாதிப்பால் சர்வஜன வாக்குரிமை தொடர்பாக மக்களுக்கு உள்ள நம்பிக்கை இழந்துவிடும் அபாயமும் ஏற்படும். நாங்கள் அந்தச் சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுத்திருந்தோம்.

1981ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சம்பவங்களின் பின்னர் ஆங்கிலத்தில் 'பெலட்' எனப்படும் வாக்குச் சீட்டு மக்களின் நம்பிக்கை இழப்புக்குப் பின்னர், 'புலட்' என்று மாறியதால் ஏற்பட்ட விளைவுகளை நாங்கள் அறிவோம். அந்தச் சந்தர்ப்பம் இலங்கைக்கு ஏற்படாது என நம்புகிறோம், பிரார்த்திக்கின்றோம்.

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் வாக்குரிமை தொடர்பில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை குறையாது.

அந்த நம்பிக்கை குறைவாகும்படி எவரும் செயற்படவும் மாட்டார்கள் என்று நம்புகிறோம்.


இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணையகம் அனைத்து நடவடிக்கையையும் மேற்கொள்ளும். ஜூன் மாதத்துக்கு முன்பாக அல்ல, ஒரு வருடத்துக்கு முன்பாகத் தேர்தல்களை நடத்த முடியாது.

மே மாதம் வெசாக் தினத்துக்கு முன்னர் நடத்துவது குறித்து பிரச்சினை காணப்படுகிறது. ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துவது முடியாத காரியமாகும்.

தேர்தலை நடத்த 75 நாள்கள் எமக்கு அவசியமானவையாகும். தொகுதிகள் தொடர்பில் எமக்குத் தெரியாது. எவ்வாறாயினும் அரசமைப்பு மாற்றம், தேர்தல்கள் முறைமை மாற்றம் என்று எது இடம்பெற்றாலும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடைபெறும். - என்றார்.

நேர்த்திக்கடன் செலுத்தும் போது

## உகந்தமலை சுனையில் வீழ்ந்து சிறுவன் சாவு!



அம்பாறை,ஜன.18

அம்பாறை உகந்த மலை முருகன் ஆலயத் துக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதற்கு குடும் பத்துடன் சென்ற சிறு வன், உகந்தமலையி லுள்ள சுனையில் வீழ்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

மட்டக்களப்பு கோட் டைக் கல்லாற்றைச் சேர்ந்த ரவி அபிலாஸ் (வயது-11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

பிரஸ்தாப சிறுவன் உகந்தமலை முருகன் ஆலயத்தில் நேர்த்திக் கடனைச் செலுத்துவதற் காக மலை மேலுள்ள கோவிலுக்குச் சென்றுள் ளார். இதன்போது, அரு கிலுள்ள நீர் நிரம்பிய சுனைக்குள் தவறி வீழ்ந் துள்ளார். இந்நிலையில் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் வரவ ழைக்கப்பட்டு அரை மணி நேரத்தின் பின்னரே மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பாணமை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட் டார். எனினும் சிறுவ னின் உயிரைக் காப்பாற்ற முடியாது போயுள்ளது.

# காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க வீதியில் இறங்கிப் போராடுங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜன.18

மட்டக்களப்பு மாவட் டத்தில் ஜனவரி மாதத் தில் மாத்திரம் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் காணிகள் வெளிநாட்டவர் மற்றும் பெரும்பான்மை இனத்த வர்களால் அபகரிக்கப் பட்டுள்ளன. இந்த விட யத்தில் தங்களை தமிழ் மக்களின் தலைவர்கள் எனஅடையாளப்படுத்து பவர்கள்வாய்மூடிமௌனி களாக உள்ளனர். படித்த சமூகம் என்ற போர்வை யில்முகநூலிலும்,வைபர் குழுவிலும் இருந்து வீரக் கருத்துக்கள் தெரி விப்பவர்கள் எமது சமூ கத்துக்காக வீதிக்கு வந்து போராட வேண் டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சதாசிவம் வியாழேந் திரன் தெரிவித்தார்.

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் பாட சாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அங்குஅவர்மேலும்தெரி வித்தவை வருமாறு:-

யுத்தம் நிறைவடைந்த பின்பு திட்டமிட்ட முறை யில் தமிழ்ச் சமூகத்தை நசுக்குவதற்காக பல செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டு வரு கின்றன. நல்லாட்சி ஏற் பட்ட பின்பும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே உள்ளனர்.

கடந்த 11ஆந்திகதி மட்டக்களப்பு மாவட்டத் தின் எல்லைக் கிராமங்க ளான மயிலத்தமடு,மாத வனைப் பகுதிகளில் அத்துமீறி நுழைந்து பெரும்பான்மை இனத் தவர் பண்ணையாளர் களைத் தாக்கியுள்ளனர்.

மறுநாள் அந்த இடத் துக்கு நான் சென்று திரும்பிய அன்று இரவு மாடுகளைச் சுட் டுக்கொன்றுள்ளனர்.

வாகரை வடக்கு பிரதேச செயலாளர் பிரி வுக்குட்பட்ட வட்டவான் கிராமத்தில் ஜேர்மனி யைச் சேர்ந்த ஹென்றி என்பவர் கடந்த 2005 ஆம் ஆண்டு 42 ஏக்கர் காணியைக்கொள்வனவு செய்து சுற்றுலா விடுதி ஒன்றை அமைத்துள் ளார். இந்நிலையில் அவரது காணிக்கு அரு கில் உள்ள வீதியைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை பெக்கோ இயந் திரம் கொண்டு சேதப் படுத்தியுள்ளார். இத னால் இந்த வீதியைப் பயன்படுத்தும் 450 குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணத்தில் சரியான முறையில் வழிகாட்டக் கூடிய தலைமைத்துவம் இல்லை. எமது வணக் கஸ்தலங்கள்ஐம்பதுக்கு மேற்பட்டவைநிர்வாகப் பிரச்சினைகள் காரண மாக நீதிமன்ற வழக்குக ளில் உள்ளன.-என்றார். (ச)

## மட்டக்களப்பில் வெவ்வேறு விபத்துகள் இருவர் உயிரிழப்பு; இருவர் படுகாயம்!



மட்டக்களப்பு,ஜன.18

வெல்லாவெளி மற் றும் களுவாஞ்சிக்குடிப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் திங்கட்கி ழமை மாலை இடம்பெற்ற வெவ்வேறு விபத்துகளில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்ததுடன், இரு வர் படுகாயமடைந்துள்ள னர்.

வெல்லாவெளி விபத் தில் மண்டூர் பாலமுனை யைச் சேர்ந்த கோ.கஜேந் திரன் (வயது-19) எஸ்.அதிரதன் (வயது -19) ஆகிய இரு இளை ஞர்களும் உயிரிழந்துள்ள னர்.

பிரஸ்தாப இளைஞர் கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து, வெல் லாவெளியில் அமைந் துள்ள வர்த்தக நிலையம் ஒன்றுடன் மோதி விபத் துக்குள்ளானது. இதன் போதே, இவர்கள் உயி ரிழந்தனர்.

இதேவேளை, களு வாஞ்சிக்குடி பகுதியில் மோட்டார் சைக்கிள் சறுக்கி விழுந்து விபத் துக்குள்ளானதில் இரு வர் படுகாயமடைந் துள்ளனர். (ச)

## முன்னாள் போராளிகளுக்கு பயிற்சிப்பட்டறை



திருகோணமலை,ஜன.18

முன்னாள் போராளிக ளுக்கான தொழில்வாண் மைப் பயிற்சிப் பட்டறை திருகோணமலை உப்பு வெளியிலுள்ள முகாமைத் துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட் டது.

மாவட்ட செயலகம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஆகியன இணைந்து நடத்தும் இரு நாள் பயிற்சிப் பட்டறையில் முதற்கட்டமாக முன்னாள் போராளிகள் 6 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் முன்னாள் போராளிகள் 415 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுக்கான தொழில்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல் நடவடிக்கைகள் இப்பயிற்சிப்பட்டறை யில் வழங்கப்படுகிறது என்று புனர்வாழ்வு அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நாகலிங்கம் புவனேந்திரன் தெரிவித்தார்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி ஆகியனவற்றின் ஊடாக இவர்களுக்கு நீண்ட காலக் கடன் அடிப்படையில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடன் தொகையைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக் கப்படவுள்ளன. இக்கடன் தொகைக்கான 4 சதவீத வட் டியை இவர்களிடமிருந்து பெறுவதுடன், எஞ்சிய 8 சதவீத வட்டியைப் புனர்வாழ்வு அமைச்சு செலுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பொருத்து வீடுகள் தொடர்பில் மௌனம் காப்பது கூட்டமைப்பின் பலவீனத்தையே காட்டுகின்றது

## தங்கள் கட்சியையே சாடுகிறார் மாகாண உறுப்பினர் துரைரெட்ணம்

துறைநீலாவணை,ஜன.17

பொருத்து வீடமைப்புத் திட் டம் வடக்கு - கிழக்கு பிரதே சங்களுக்கு ஏற்புடையதல்ல என்று தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு மத்திய அரசை வலி யுறுத்தாமல் உள்ளமை எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு விட்டு, இணக்க அரசியலை மேற் கொண்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தலை மைகளின் பல வீனத்தையே காட்டுகின்றது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரை ரெட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத் திய அரசு வீடுகளை நிர்மாணித் துக் கொடுக்க முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். இருப்பினும் வீடமைப்பு என்ற போர்வையில் சூழலுக்கு பொருத் தப்பாடற்ற பொருத்து வீடுகளை அமைத்துக் கொடுக்க முனை வது ஏற்புடையதல்ல, எனவே, மத்திய அரசு இந்த விடயம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்து, போரால் பாதிக்கப்பட்ட மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் கருத்துக்களைக் கேட் டறிந்து, ஏற்புடையதான வீடு களை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும்.

மீள் குடியேற்றத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பொருத்து வீடு கள் தான் என்று அடம்பி டித்து நிற்கின்றமை போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களை திரி சங்கு நிலைக்கு ஆளாக்கியுள் ளது. தற்சமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மூலமாக, மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட மக்க ளுக்குப் பொருத்து வீடுகளை அமைப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றமையைக் காணமுடி கிறது.

இதேவேளை, இந்த வீடு தேவையா? இல்லையா? என்ற நிலையில் வீடமைப்பு உதவி யைக் கோரியுள்ள மக்களும், அரச கொள்கையை அமுல் படுத்த வேண்டிய அரச அதி காரிகளும் மற்றும் உத்தியோ கத்தர்களும் திண்டாட்டமான நிலையில் உள்ளனர். இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அர சியல் தலை மைகள் உடனடியாக ஜனாதிபதியைச் சந்தித்து பொருத்து வீட்டு விவகாரம் தொடர்பாக ஒரு தீர்க்கமான முடிவை மேற்கொள்ள வேண் டும்.

அப்போதுதான் நொந்து போய் வாழும் எமது மக்கள் ஆறுதல் அடைவர்.

மேலும் பொதுமக்களின் எண் ணங்கள், அபிலாஷைகள் என் பவற்றைச் செவிமடுத்து மதிப் பளிக்க முனையாத சம்பந்தப் பட்ட அமைச்சர் தமிழ் மக்களின் நலன் கள், உரிமைகள் ஆகியன தொடர்பில் எதிர்காலத்தில் எப் படி நடந்து கொள்வார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.- என் றார். (ச-151)


**மணமக்கள்**

☎ 0114320017- 8

அலுவலக நேரம்
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 6442 \| கோ<br>1987 \| இளவாலை<br>Doctor \| இலங்கை<br>உத்தராடம் (மகரம்) \| கி.பா: 04 | 4515 \| வே<br>1990 \| யாழ்.நகரம் \| 160 cm<br>Engineer \| இலங்கை<br>கார்த்திகை (ரிஷபம்) \| கி.பா: 42 \| செ : 01 |
| 4497 \| கோ<br>1985 \| சுண்ணாகம் \| 178 cm<br>Engineer \| இலங்கை<br>உத்தரட்டாதி (மீனம்) \| கி.பா: 55 \| சூ.செ:4 | 5186 \| வே<br>1989 \| நல்லூர் \| 160 cm<br>Lecturer \| இலங்கை<br>கேட்டை (விருச்சகம்) \| கி.பா: 25 \| செ:04 |
| 6644 \| வே<br>1985 \| காரைநகர் \| 162 cm<br>Bank Manager \| இலங்கை<br>திருவோணம் (மகரம்) \| கி.பா: 10 \| செ:04 | 5950 \| கு<br>1988 \| கரணவாய் \| 160 cm<br>Teacher \| இலங்கை<br>சதயம் (கும்பம்) \| கி.பா: 57 |
| 7293 \| ந<br>1983 \| காங்கேசன்துறை \| 172 cm<br>Teacher \| இலங்கை<br>பூரம் (சிம்மம்) \| கி.பா: 42 \| செ : 08 | 3843 \| ப<br>1987 \| உரும்பிராய் \| 167 cm<br>Teacher \| இலங்கை<br>அத்தம் (கன்னி) \| கி.பா: 28 |
| 4870 \| வே<br>1982 \| சுழிபுரம் \| 160 cm<br>Teacher \| இலங்கை<br>உத்தரட்டாதி (மீனம்) \| கி.பா:27 \| செவ்: 7 | 5261 \| வே<br>1986 \| கோப்பாய் \| 160 cm<br>Software Engineer \| இலங்கை<br>உத்தராடம் (மகரம்) \| கி.பா: 60 \| செ : 08 |

அருந்ததி

www.arunthathee.com

480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

(C-172)

## கரிகாற்சோழன் விருது வழங்கும் விழா சனியன்று

தஞ்சாவூர்தமிழ்ப்பல் கலைக்கழகமும், எம்.ஏ. முஸ்தபா அறக்கட்டளையும், கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து வழங்கும் கரிகாற்சோழன் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் முஸ்தபா அறக்கட்டளை நிறுவுநர் எம்.ஏ.முஸ்தபா தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் வாழ்த்தை இசை ஆசிரிய ஆலோசகர் வி. கணேசலிங்கம் இசைக்கவுள்ளார். வரவேற்புரையை பேராசிரியர்.வ.மகேஸ்வரனும் நிகழ்த்துவர். கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியமும், முன்னிலை வகிக்க சிறப்புரையை இந்தியா நந்தி தொலைக்காட்சியைச் சேர்ந்த ரங்கராஜ் பாண்டேயும், வாழ்த்துரையை பேராசிரியர்களான சி.தில்லைநாதன், சபா ஜெயராசா, சி.சிவலிங்கராசா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

நோக்குநர் உரையை பேராசிரியர்.சா.உதயசூரியன்நிகழ்த்தவுள்ளார். தஞ்சாவூர் பல்கலைக்கழகத் துணைவேந்தரான பேராசிரியர்.ச.பாஸ்கரன் விருதுகளைவழங்குவார். இம்முறை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும். (இ)

## லொத்தர் விலை அதிகரிக்காது!


கொழும்பு, ஜன.18

அதிஷ்ட இலாபச் சீட்டுக்களின் (லொத்தர்) விலையை 20 ரூபாவாகவே வைத்திருக்குமாறும், அதிகரிக்க வேண்டாம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தத் தகவலை, அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ஐ)

# அரசியல்வாதிகளிடம் உள்ள பிரச்சினைகளால் வடக்குக்கு வரும் அபிவிருத்தி நிதி திரும்புகிறது

### வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கிளிநொச்சியில் தெரிவிப்பு





கிளிநொச்சி, ஜன.18

அரசியல்வாதிகளிடம் காணப் படும் பிரச்சினைகளால் வடக்குக்கு வரும் பணம் திரும்பிச் செல்கிறது என்று வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே தெரிவித்துள்ளார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிக்கான இணைந்த கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வட்டக்கச்சியில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

அரசியல்வாதிகளுக்குள் இருக்கும் பிரச்சினைகளால் வடமாகாணத்துக்கு வரும் பணம் செலவழிக்கப்படாமல் திரும்பிச்செல்கின்றது.

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டு செல்வதற்கு மிகப்பெரிய தொகைப் பணம் வந்தது. திட்டம் இடம்பெறாமையால் திரும்பிச் சென்றது. அதுமட்டுமல்ல மாங்குளம் பகுதியில் பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கும் பணம் வந்தது. அதுவும் திரும்பியது.

வாக்குவாதங்கள் இல்லாது அனைவரும்சேர்ந்து மக்களுக்கு வேலைசெய்ய வேண்டும். நான் இனவாத அரசியல் செய்யவில்லை. நாம் இன மத கட்சி வேறுபாடின்றி இணைந்தால் இந்த நாட்டை அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்ல முடியும்.

நமது கடவுள் எல்லாம் தமிழ், சிங்கள வேறுபாடின்றி ஒன்றாக ஒற்றுமையாக இருக்கின்றனர். அரசியல் பிரமுகர்களும் தமிழ், சிங்கள வேறுபாடின்றி திருமணம் செய்து ஒன்றாக இருக்கின்றனர். நாம் சண்டை பிடிக்க ஒரு கரணம் கூட இல்லை. நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

இராணுவத்தினர் கூட புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இப்பொழுது உள்ள இராணுவம் யுத்தத்துக்கானது அல்ல. பொலிஸாரும் அவ்வாறே. அனைவரும் மக்களுக்கானவர்கள் அதேபோல் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். அதுவே நல்லிணக்கம்.- என்றார்.

இந்தச் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் வேலை செய்யும் தாய்மார்களது குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பராமரிப்பகத்தை அமைக்க தனது சொந்தப் பணத்தில் இருந்து இரண்டு லட்சம் தருவார் என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கிளிநொச்சி வட்டக்கச்சியில் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பண்ணையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பொங்கல் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அங்கு நடைபெற்ற பொங்கல் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட நாகதம்பிரான் கோவிலிலும் இடம்பெற்ற சிறப்பு வழிபாட்டிலும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிக்கான இணைந்த கட்டளைத் தளபதி கேணல் ரட்ணப்பிரிய பண்டு, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கிளிநொச்சி கட்டளை அதிகாரி மேஜர் சாகர வீரசிங்க, சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-70)

## பிரிட்டனுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ள ஊவா முதலமைச்சர்

கொழும்பு,ஜன.18

காலனித்துவ ஆட்சியின்போது ஊவா மாகாணத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்கு இழப்பீடு கோரி பிரிட்டனுக்கு எதிராக வழக்குத் தொடரப் போகிறார் என்று ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கெப்பிட்டிபொல உட்பட நாட்டின் 19 பேரை தேசத்துரோகிகளாகப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அன்று பிரகடனம் செய்தனர். இது ஊவா மண்ணுக்கு ஏற்பட்ட பெரும் அபகீர்த்தியாகும்.


அத்துடன் 1817 தொடக்கம் 1818ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சுதந்திரப் போராட்டத்துக்காக ஊவா வெல்லஸ்ஸ மண்ணில் சுமார் 14 ஆயிரம் பேர் வரை தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

அதேவேளை, வெள்ளையர் ஆதிக்கத்துக்கு எதிராக போராடியதால் பிரிட்டன் ஆளுநர் ரொபேர்ட் பிரௌண்ரிக்கால் தேசத்துரோகிகள் என்று பிரகடனம் செய்யப்பட்ட கெப்பிட்டிபொல திசாவே உள்ளிட்ட 19 பேரும் தேசத்துரோகக் குற்றச்சாட்டிலிருந்து அண்மையில் இலங்கை அரசால் விசேட வர்த்தமானி ஊடாக விடு விக்கப்பட்டனர் .

இதனையடுத்து இழப்பீடு கோரும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.- என்றார்.

(ஐ)

## ‘எழுக தமிழ்’ நிகழ்வும் திருமலை ஆயர் ஆசீர்வாதமும்





கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ‘எழுக தமிழ்’ நிகழ்வுக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் வண.நொயல் இமானுவேல் ஆசீர்வாதமும், வாழ்த்தும் தெரிவித்திருக்கின்றார்.

‘எழுக தமிழ்’ நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள ‘தமிழ் மக்கள் பேரவை’யின் உயர்மட்டக் குழு என்ற அந்த அமைப்பின் இணைத் தலைவர் ரி.வசந்தராஜா தலைமையில் திருகோணமலை ஆயரை சந்தித்து தமது நிகழ்வு குறித்து விளக்கமளித்த போதே அவர் அந்த நிகழ்வை வாழ்த்தி ஆசீர்வதித்தார்.

அந்தச் சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.



கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தில் இருந்து வான்பாயும் வழியாக குழாய்கள் மூலம் நீர் பெறப்பட்டு எஞ்சிய வயல் நிலங்களைக் காப்பாற்றும் பணியில் கிளிநொச்சி விவசாயிகள். (ஐ-70)

## புதுக்குடியிருப்பு சந்தைக்கான புதிய கட்டடம் விரைவில் திறப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புபொதுச்சந்தையின் மரக்கறிக் கடைத் தொகுதிக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள முதன்மையான பொதுச்சந்தையாகக் காணப்படும் புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை போதிய வசதிகள் இன்றிக் காணப்படுகின்றது.

இதனையடுத்து கடந்த ஆண்டு பொதுச் சந்தையின் கடலுணவு விற்பனைத் தொகுதிக்கான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நிலையில் மரக்கறி வாணிப தொகுதி மற்றும் ஏனைய கடைத்தொகுதிகள் தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் கடந்த ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் 32 கடைகளைக் கொண்ட புதிய கட்டடத் தொகுதி ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இந்தக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படவுள்ளது.

2016 ஆம் ஆண்டில் நெல்சிப் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 113.48 மில்லியன் ரூபா செலவிலான 12வேலைத்திட்டங்களில் ஒன்றாக இந்தச் சந்தைத் தொகுதி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதுக்குடியிருப்பில் திருவள்ளுவர் சிலை



ஒட்டுசுட்டான், ஜன.18

புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு கலாசாரப் பேரவை தலைவர் சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருவள்ளுவர் சிலையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் மற்றும் வடமாகாணசபை பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் ஆகியோர் திறந்து வைத்தனர். நினைவுக்கல்லை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரதீபன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் வரவேற்புரையை ஆசிரியர் சுதர்சன் நிகழ்த்தினார். திருவள்ளுவரின் திருக்குறள்கள் பற்றிய சமகாலப் பார்வையை வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த யோ.புரட்சி நிகழ்த்தினார். தொடர்ந்து வள்ளுவர் சார்ந்த கருத்துரைகளை முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா, ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாகரத்தினம், புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரதீபன், பீற்றர் இளஞ்செழியன், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் ஆகியோர் வழங்கினர். சிலையை வடிவமைத்த கோபிக்கு நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது. (ஐ-82)

# வெறும் வாய்ப் பேச்சு கோஷங்களை எழுப்பி மக்களின் பிரச்சினையை தீர்க்க இயலாது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் அக்கராயனில் தெரிவிப்பு





வெறும் வாய்ப்பேச்சு அரசியல் கோசங்களை எழுப்பிக் கொண்டிருப்பதன் மூலம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகளை எட்ட முடியாது. இதனைத் தற்போது மக்கள் மெல்ல, மெல்ல உணரத் தொடங்கி விட்டார்கள்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் கடந்த ஞாயிறு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்கள் தமது வாக்குகளை நம்பியே அளித்து வருகின்றனர். ஆனால் தமிழர்களிடையே காணப்படுகின்ற சொந்த நலனை மட்டுமே சிந்திக்கின்ற அரசியல்வாதிகள் மக்கள் எதற்காக வாக்களித்தார்களோ அதனை நிறைவேற்றுவதில்லை. ஏன் தேர்தல் காலத்தில் வருகை தரும் அரசியல்வாதிகள் மறு தேர்தலுக்குத்தான் மக்களிடம் வருகின்றார்கள். தமிழர்களும் மரபு ரீதியாகவே நம்பிக்கையின் அடிப்படையில் வாக்களிப்பில் ஈடுபடுகின்றார்கள்.

ஆனால், தெற்கிலும் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றாத அரசியல்வாதிகளை மக்கள் தூக்கி எறிந்து விடுகின்றார்கள்.

ஆனால் இலங்கைத் தமிழர்கள்தான் வாக்களிப்பை மரபு ரீதியாக எந்தக் கேள்வியும் சிந்தனையும் இல்லாமல் மேற்கொள்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்திலே பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நான் பணியாற்றிய காலங்களில் துறைசார்ந்த அதிகாரிகளுடன் மக்களை நேரடியாகச் சந்தித்து மக்களின் தேவைகளை அதிகாரிகள் மூலமாகத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தேன்.

ஆனால், தற்போது நடைபெறுகின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மக்களின் பிரதிநிதிகள் தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை.

மாற்றுத்திறனாளிகள் கூடத் தங்களுடைய தேவைகளையும் குறைபாடுகளையும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை.

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அரசியல் பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பார்களா என்பதை மக்களே உறுதி செய்ய வேண்டும்.- என்றார். (இ-70)

# தனியார் ஒருவரது காணியில் அமைக்கப்பட்ட பொதுக்கிணறு

## விசனம் தெரிவிக்கின்றனர் பொது மக்கள்

வவுனியா,ஜன.18

வவுனியா, கோவில் குளம் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட பொதுக் கிணறு அரச உத்தியோகத்தரின் பிரத்தியேக காணியில் கட்டப்பட்டுள்ளதாக கிராம மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியா நகரசபையால் கோவில்குளம் கிராம மக்களுக்கு மாதர் சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்ட 8 லட்சம் ரூபா பெறுமதியான கிணறே தனியொருவரின் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கிராம மக்கள், வவுனியா நகர சபையால் கோவில்குளம் கிராம மக்களுக்க ஒரு பொதுக் கிணறு தேவையெனக் கோரிக்கை விடப்பட்டிருந்த நிலையில் நகரசபை செயலாளர் கிராமத்துக்குக் கிணறு அமைத்துத் தருவார்கள் என்று வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன் பிரகாரம் மீண்டும் கிராம மக்கள் நகர சபை செயலாளரிடம் பொதுக் கிணறு வழங்குமாறு கோரியபோது, கோவில்குளம் கிராமத்துக்கு மாதர் சங்கத்தினூடாகப் பொதுக் கிணறு வழங்கப்பட்டுவிட்டது என்று பதிலளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாதர்சங்கத்தைத் தொடர்பு கொண்டு கிணறு தொடர்பாக விசாரித்தபோது வவுனியா மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் பெண் ஒருவரின் சொந்தக் காணியில் கிணறு கட்டப்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் செயற்பாடு தொடர்பில் அதிர்ச்சியடைந்த கிராம மக்கள் கோவில்குளம் கிராம உத்தியோகத்தர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.


எனினும் அதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன் கிராமத்தில் இரண்டு பொதுக் கிணறுகளுக்கான தேவை இருக்கும் நிலையில் அதிகாரத்திலிருப்பவர்கள் மக்களை வஞ்சித்து தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்துக்குப் பொதுக் கிணறை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir







# மெல்பேர்ன் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்ற தைப்பொங்கல் விழா

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் மேற்கு வாழ் தமிழர்களால் தைப்பொங்கல் விழா கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமையன்று விக்ரோரியா Ashcroft park வில்லியம்ஸ் லேண்டிங் என்ற இடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களால் நாடு மற்றும் சமய வேறுபாடுகளைக் கடந்து மிகவும் உணர்வுபூர்வமாகவும், உற்சாகத்துடனும் கொண்டாடப்பட்டுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு மண்பானை வைத்து கலாசார முறைப்படி ஆரம்பமான பொங்கல் நிகழ்வு விந்தம் தமிழ்ப்பாடசாலை மாணவர்களது தை வணக்க நிகழ்வுகளுடன் சிறப்பாக ஆரம்பித்தது. அடுத்து தமிழர் பண்பாட்டு விளையாட்டுகளான சிலம்பாட்டம், உறியடித்தல், கயிறிழுத்தல் ஆகிய விளையாட்டுகள் சிறப்பான முறையில் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் பங்குபற்றிய இளைஞர்கள்,யுவதிகள் மற்றும் முதியவர்கள் ஆகியோர் பால்,வயது பாகுபாடின்றி மிகவும் உற்சாகத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

அத்துடன் சிறுவர்களுக்கான குறுந்தூர ஓட்டம், பலூன் உடைத்தல் ஆகிய விளையாட்டுக்களும் சிறப்பாக நடைபெற்றன.

மிகவும் குறுகிய காலப்பகுதியில் மெல்பேர்ன் மேற்குவாழ் இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்ற தைப்பொங்கல் விழா பலரது கவனத்தையும், பாராட்டுக்களையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டது. இது மிகவும் முன்மாதிரியான தமிழ் கலாசார விழாவாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சுவிஸில் தமிழர் திருநாள்





செங்காளன் மாநிலத் தமிழ்ப்பள்ளிகள் இணைந்த வகையில் தமிழர் திருநாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். மங்கல விளக்கேற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமாகியது. தாயகத்தின் தைப் பொங்கலை நினைவுபடுத்தும் வகையில் பொங்கல் இடம்பெற்றது.

தொடர்ந்து, மாணவர்களால் தமிழர்களின் கிராமியக் கலை வடிவங்களான காவடி, கோலாட்டம், கும்மி, தப்பாட்டம் ஆகியவற்றோடு இயல், இசை, நாடக நிகழ்வு பட்டி மன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்வுகளும் அரங் கேற்றப்பட்டன.

தொன்மைச் சிறப்புமிக்க தமிழரின் பண்பாட்டையும் வாழ்வியலையும் வெளிப்படுத்தும் தமிழர் திருநாள் செங்காளன் மாநிலத் தமிழ்ப்பள்ளிகளின் மாணவர்களால் கொண்டாடப்பட்டமை தமிழர்களது பண்பாடு இளைய தலைமுறையினரிடம் கையளிக்கப்பட்டமையையும் அதனை அவர்கள் விருப்புடன் கையேற்று இனிவரும் அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் கையளிப்பார்கள் என்ற நம்பிக்கையையும் சுட்டி நின்றது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.




# ஜேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடத்திய தைப்பொங்கல் விழா

தமிழர் 'ஒருங்கிணைப்புக் குழு ஜேர்மன் கிளையால் பொங்கல் விழா ஜேர்மன் டுசில்டோர்ப் நகரில் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது.

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு ஆரம் பிக்கப்பட்ட பொங்கல் நிகழ்வில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுச் செயற்பாட்டாளர்களும் அதன் துணை அமைப்புக்களின் செயற்பாட்டாளர்களும் பொது மக்களும் இணைந்திருந்தனர். அத்துடன் சிறப்பான மேடை நிகழ்வுகளும் நடை பெற்றன. பெருமளவு மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.










# லண்டன் பத்திரிகை நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்

லண்டன் 'தமிழினி' பத்திரிகை ரீதியில் 'அறிவுமலை அப்துல் கலாம்' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியை நடத்தி இருந்தது. அந்தக் கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கீழ் பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**- முதலிடம் துஷ்யந்தி பாஸ்கரன் (விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு)

**இரண்டாமிடம்**- வைஸ்ணவி இராமகிருஷ்ணன் (இணுவில் மத்திய கல்லூரி, இணுவில்)

**மூன்றாமிடம்**- அபிஷேக் மீனாசுந்தரம் (டி.எஸ். சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு)

**சிறந்த கட்டுரைகள்-07**

ஜதுர்ஷிகா யோகரத்தினம் (இறம்பைக்குளம் மகளிர் ம.வி., வவுனியா), ரிஷோபிகா செயறூபன் (இறம்பைக் குளம் மகளிர் ம.வி., வவுனியா), விமலேஸ்வரன் பவிக்சன் (கிளிநொச்சி ம.வி.), சிவதாஜினி ஆனந்த சோதி (இணுவில் மத்திய கல்லூரி), மாதங்கி குபேர மூர்த்தி (இணுவில் இந்துக் கல்லூரி), எம்.மிதுஷனா (விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர் கொழும்பு), எம். ஆர்.ஜுஹா இஸ்ஸாத் (மேஸி கல்வி நிறுவனம், மதுரன்குளிய)

**மேற்பிரிவு**

**முதலாமிடம்**- கனகதுர்க்கா கனகரத்தினம் (கலைப் பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்)

**இரண்டாமிடம்**- ஜதிணா சோதிநாதன் (கலைப்பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்)

**மூன்றாமிடம்**- அமுதினி அருளானந்தம் (புனித சிசிலியா பெண்கள் கல்லூரி, மட்டக்களப்பு)

**சிறந்த கட்டுரைகள்-07**

மரியநாயகம் கேசவன் (மொறட்டுவப் பல்கலைக் கழகம்), ரி.அருள்மொழி (கலைப்பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்), டிலோகிகா யோகரத்தினம் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), ய.சுதர்ஷினா (விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), காயித்திரி ஜெயமோகன் (மோதரை இந்துக் கல்லூரி கொழும்பு-15), கே. கோபிகா(சி.சி.தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொட), சோபிகா சிவநாதன் (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா)

பரிசளிப்பு பற்றிய அறிவித்தல் பின்பு அறியத்தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)




வொன்.வேணு கிருஷ்ணா

### ட்ரம்ப்பிடம் திட்டு வாங்கிய செய்தி ஊடகங்கள்

புதனன்று (11.01.2017) காலை ரொனால்ட் ட்ரம்பின் பத்திரிகையாளர் சந்திப்பு, நவீன அமெரிக்க வரலாற்றில் முன்னுதாரணம் இல்லாதளவுக்கு ஜனநாயகக் கோட்பாடுகளின் அவமதிப்பு மற்றும் செல்வந்த தட்டுக்களின் இறுமாப்பை மணிக்கணக்கில் எடுத்துக்காட்டுவதாக இருந்தது.


(Donald Trump's press conference Wednesday morning was an hour-long demonstration of oligarchic arrogance and contempt for democratic principles that has no parallel in modern American history.)






Source:http://www.pbs.org/newshour/updates/donald-trumps-press-conference-press-confrontation/

**Donald Trump's press conference was a press confrontation**



*President-elect Donald Trump called on reporters during a news conference in the lobby of Trump Tower. Photo by REUTERS/ Lucas Jackson*

### ட்ரம்ப் நிறுவனம் (Trump Organization)





பத்திரிகையாளர் கூட்டத்திற்கான அத்தருணம், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரின் பிரதான வணிக நிறுவனமான ட்ரம்ப் நிறுவனத்தை (Trump Organization) அவரது இரண்டு மகன்கள் டொனால்ட் ஜூனியர் மற்றும் எரிக் (Donald Jr. and Eric) ஆகியோரது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் திட்டங்களை அவர் அறிவிப்பதற்குரிய தருணமாக இருந்தது. மூத்த ட்ரம்ப் சகல உத்தியோகபூர்வ நிர்வாக பொறுப்புகளில் இருந்தும் விலகுவார், அதேவேளையில் பிரதான உரிமையாளர் அந்தஸ்தை அவர் பேணுவார்.

( The occasion for the press conference was the president-elect's announcement of plans to put the Trump Organization, his main business entity, under the management of his two sons, Donald Jr. and Eric. The senior Trump would step down from all formal management roles while retaining his status as the principal owner.)

இந்த ஏற்பாடுகள் அறநெறி சார்ந்த முன்னாள் அரச அதிகாரிகளால் ஒரு நீண்டகால வழமையின் கேலிக்கூத்து என்பதாகக் கண்டிக்கப்படுகிறது: அதாவது, நவீன காலகட்டத்தின் ஒவ்வோர் அமெரிக்க ஜனாதிபதியும், எந்தளவு பணக்காரர்கள் என்பதற்கு அப் பாற்பட்டு, பகிரங்கமான நலன்களுக்கிடையிலான மோதல்களை (conflict of interest) தவிர்ப்பதற்காகத் தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் ஒரு திரைமறைவு அறக்கட்டளையில் வைக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

(These arrangements have been denounced by former government ethics officials as a travesty of longstanding norms. every US President in the modern period, no matter how wealthy, has been compelled to place all his assets in a blind trust to prevent overt conflicts of interest.)

**{Donald Trump's Real Net Worth: $3.5 billion**

By Aaron Hankin | Updated November 9, 2016 — 9:29 AM EST

Source: http://www.investopedia.com/

In May, Trump released his Personal Financial Disclosure (PFD) forms with the Federal Election Commission (FEC). In true Trump fashion, he was quick to let everyone know. "I filed my PFD, which I am proud to say is the largest in the history of the FEC," Trump said.The PFD revealed Trump had:

At least $1.4 billion in assets, which includes 40 Wall St, the Trump Tower, golf course resorts in Florida, NY, NJ and Scotland and an aircraft, all which are valued at over $50 million.

- Over $300 million in income from the golf courses and resorts.
- Over $100 million in rental income and sales from his property.
- At least $25 million in Blackrock's Obsidian fund.
- Liabilities, which include debt of $50 million or more on each of the following; the Trump Tower, 40 Wall Street, Trump National Doral, Trump International Hotel and Trump Old Post Office.

Forbes recently reduced its estimate of Donald Trump's net worth to $3.7 billion, down from $4.5 billion earlier this year. Forbes said the softening of the high end retail and commercial property market in New York City is to blame for the $800 million reduction. In their reassessment, Forbes looked at 28 assets of which they said 18 had declined in value since the last estimate.}

ஆனால், எதிர்காலத்தில் மிரட்டும் கண்ணோட்டத்தில் ரஷ்ய அரசாங்கம் ட்ரம்ப் தொடர்பான ஆவணங்களை சேகரித்தது என்ற சரிபார்க்காத குற்றச்சாட்டுக்களைக் கொண்ட ஓர்ஆவணத்துடன் சம்பந்தப்பட்ட பல கேள்விகளோடு, 2016 தேர்தல்களின் போது ஜனநாயகக் கட்சியினது தேசிய கமிட்டி மற்றும் கிளிண்டன் பிரசாரக் குழு தகவல்களுக்கு இணங்க, ரஷ்யா ஊடுருவியதாகக் குற்றஞ்சாட்டப்படும் பிரச்சினை தான் அந்த பத்திரிகையாளர் நிகழ்ச்சியில் மேலோங்கி இருந்தது.

(The event was dominated, however, by the issue of alleged Russian hacking of the Democratic National Committee and the Clinton campaign during the 2016 elections, with many questions relating to a document containing unverified allegations that the Russian government collected compromising material on Trump with an eye to future blackmail.)

ஜனநாயகக் கட்சி ட்ரம்ப் மீதான அதன் விமர்சனத்தை, சி.ஐ.ஏ. இல் உள்ள அதன் கூட்டாளிகள் வழங்கிய ஆவணங்களின் மீது மையப்படுத்த முடிவெடுத்துள்ள போதிலும், வரவிருக்கும் நிர்வாகத்தின் மீது பகிரங்கமாக உருபெற்ற நிஜமான தாக்குதல் செய்தியாளர் கூட்டத்தில் கண்கூடாக வெளிப்பட்டது.

( While the Democratic Party has chosen to center its critique of Trump on material provided by its allies in the CIA, the real assault on the public embodied in the incoming administration was visibly demonstrated at the news conference.)

அந்த நிகழ்ச்சியின் ஒரு கணிசமான பகுதி ட்ரம்பின் சட்ட ஆலோசகருக்கு ஒதுக்கப்பட்டது. அவர் அறிவிக்கையில் ''ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்ப் பல ஆண்டுகளாகக் கட்டமைத்திருக்கும் வியாபார சாம்ராஜ்ஜியம் மிக பிரமாண்டமானது'' என்று கூறியதுடன், நலன் - மோதல் சார்ந்த சட்ட வரையறைகள் ட்ரம்ப்புக்கு ஏன் பொருந்தார் என்றும் விவரிக்க நகர்ந்தார். ட்ரம்ப் 'அவரது தனிப்பட்ட ஆதாயத்துக்காக ஜனாதிபதி பதவியைப் பயன்படுத்தவில்லை' என்று அப்பெண்மணி அமெரிக்க மக்களுக்கு உறுதியளித்தார்.

(A significant portion of the event was given over to Trump's legal advisor, who declared that the "business empire built by President-elect Trump over years is massive," and proceeded to explain why conflict-of-interest statutes do not apply to Trump. She assured the American people that Trump "is not exploiting the office of the presidency for his personal benefit.")

ட்ரம்ப் நிறுவனம் சார்பாக செய்யப்பட இருக்கின்ற பல்வேறு ஏற்பாடுகளை எடுத்துக்காட்டும் சட்டப்பூர்வமற்ற ஆவணங்களை உள்ளடக்கியதாக கூறப்படும் மணிலா கோப்புறையை ட்ரம்ப் உடனிருப்பவர்கள் கொண்டு வந்து குவித்தனர். ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் அவரது செல்வவளம் மற்றும் வெற்றிகள் குறித்து பெருமை பீற்றிக் கொள்கின்ற அதே வேளையில், நலன்-மோதல் சார்ந்த விதிமுறைகளில் தனக்கு விதிவிலக்கு இருப்பதாக அவர் மீளவலியுறுத்தினார். இது ஏனென்றால், 1974 இல் ஜெரால்டு ஃபோர்டால் பில்லியனர் நெல்சன் ரோக்கிஃபெல்லர் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட போது, அவருக்கான விதிவிலக்கை முன் கூட்டியே சட்டப்பூர்வமாக்க, எளிதில் விளங்காத ஒரு 1978 சட்டம் நிறைவேற்றப்பட்டது தான் இதற்கு காரணம்.

{Trump aides piled up hundreds of manila folders allegedly comprising documents showing the various arrangements to be made with respect to the Trump Organization. While the president-elect boasted of his wealth and success, he reiterated that he is exempt from conflict-of-interest rules (due to an obscure 1978 law passed to retroactively legitimize the free pass given to billionaire Nelson Rockefeller when he was appointed vice president by Gerald Ford in 1974).}

### சமூகம் இரண்டு முகாம்களாக பிளவுபட்டுள்ளது

ட்ரம்ப் வெறுமனே ஒரு சட்ட நுட்பத்தை மேற்கோளிடவில்லை. அவர், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பெரும் பணக்காரர்களுக்கு பொருந்தும் வகையில், சட்டம் மற்றும் விதிமுறைகளில் இருந்து அவர்களுக்கு முழுமையான விலக்கீட்டுரிமை வழங்குவதை அறிவிக்கிறார். இது பிரெஞ்சு புரட்சிக்கு முந்தைய பிரபு வம்சத்தினரால் வலியுறுத்தப்பட்ட பிரபுத்துவ கோட்பாடுகளின் 21 ஆம் நூற்றாண்டு பதிப்பாகும். அதாவது விதிமுறைகளை உருவாக்கும் உயர்மட்டத்தில் உள்ள செல்வந்த உயரடுக்கு, மற்றும் விதிமுறை யாருக்கு பொருந்துகிறதோ அந்த பரந்த பெருந்திரளான உழைக்கும் மக்கள் என சமூகம் இரண்டு முகாம்களாக பிளவுபட்டுள்ளது என்பதாகும்.

(Trump was not just citing a legal technicality. He was declaring the complete immunity of the capitalist oligarchy from the laws and regulations that apply to the general population. All laws and democratic principles are subordinate to oligarchic privilege.)

### ''நிறுவனம்'' மற்றும் ''நாடு''

அவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை செய்ய அவருக்கு உரிமை உண்டு என்பதை வலியுறுத்தி, ட்ரம்ப் ஒரு புள்ளியில் பின்வருமாறு அறிவித்தார்:- ''ஜனாதிபதியாக இருந்தாலும், நான் ட்ரம்ப் நிறுவனத்தை, சிறந்த, தலைசிறந்த அந்த நிறுவனத்தை நடத்த முடியும், என்னால் இந்த நிறுவனத்தையும் - அதாவது நாட்டையும்-வழிநடத்த முடியும். {இரண்டிலும்} என்னால் சிறப்பாக பணியாற்ற முடியும், ஆனாலும் அதை நான் செய்ய விரும்பவில்லை'' என்றார்.

( Insisting that he had the right to do whatever he wanted, Trump at one point declared: "As President, I could run the Trump organization, great, great company, and I could run the company—the country. I'd do a very good job [at both], but I don't want to do that.")


''நிறுவனம்'' மற்றும் ''நாடு'' இரண்டையும் ஒன்றோடொன்று கலக்கும் ஃபிராய்டியன் தழுவல் (Freudian slip), பத்திரிகையாளர் கூட்டத்தில் மிகவும் அப்பட்டமான நடவடிக்கையாக இருந்தது. ட்ரம்பை பொறுத்த வரையில், ''நாடு'' மற்றும் ''நிறுவனம்''-அதாவது, மிகவும் பரந்தளவில், செல்வந்த உயரடுக்கு - இரண்டும் ஒன்றே, ஒரே மாதிரியானதே.

( The Freudian slip, mixing up "company" and "country," was the most revealing moment in the press conference. For Trump, the "country" and the "company"—and, more broadly, the oligarchy—are one and the same.)

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




30

## டில்லியில் புதிய நிர்வாக ஆட்சி

இந்திரா காந்தியின் ஈமச் சடங்கின் போது இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்து சிறிதுநேரம் உரையாடும் வாய்ப்பு ராஜீவுக்கு கிட்டியது. அந்த முதற் சந்திப்பின் போது பரிமாறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஜெயவர்த்தனா மீது ராஜீவுக்கு மதிப்பும் கவர்ச்சியும் ஏற்பட்டது. முதற்சந்திப்பின்போது தனது சாதுரியமான சாணக்கியத்தைப் பயன்படுத்திய ஜெயவர்த்தனா அன்பும், பண்பும் ஆழமான அரசியல் ஞானமும் கொண்ட ஓர் உண்மையான பௌத்தராகத் தன்னை இனம் காட்டிக் கொண்டார். இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்தே ராஜீவின் தந்தையான நேருவுடனும் மகாத்மா காந்தியுடனும் நட்புறவு தாம் வைத்திருக்கின்றார் எனத் தன்னை ராஜீவுக்கு அறிமுகம் செய்துகொண்ட இலங்கை அதிபர், இந்தியாவுடன் ஒத்திசைவான நட்புறவை வளர்த்துக் கொள்வதே தனது அரசியல் இலட்சியம் என எடுத்துரைத்தார். ஒரு முதிர்ந்த அரசியல் மெய்ஞ்ஞானி என்ற பாத்திரத்தில் தன்னை நிறுத்தி, ராஜீவுக்கு ஆலோசனை வழங்கவும் அவர் தயங்கவில்லை. ஒரு பழம்பெரும் நாட்டின் இளம்பெரும் தலைவராக விளங்குகின்ற ராஜீவ் காந்தி, தனது அயல் நாடுகளுடன் நல்லுறவை வளர்த்து, தென்னாசியப் பிராந்தியத்தில் அமைதியையும் உறுதி நிலையையும் நிலைநாட்டும் பொறுப்பைச் சுமந்து நிற்கிறார் எனச் சுட்டிக்காட்டினார். ஜெயவர்த்தனாவின் புத்திசாலித்தனமான கருத்தாடலால் கவரப்பட்ட ராஜீவ் காந்தி, இலங்கையுடனான ஆட்சிப் பீடத்தின் அணுகுமுறையானது தனது தாயின் ஒரு தலைப்பட்சமான கொள்கையை விட வேறுபட்டதாக அமையும் என உறுதியளித்தார். தனது ஆட்சிப் பீடத்தின் மத்தியஸ்துவ முயற்சி நேர்மையானதாகவும் பாரபட்சமற்றதாகவும் அமையப்பெறும் என்று ராஜீவ் எடுத்துரைத்தார்.

இலங்கையின், இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றுக்குப் பங்கம் ஏற்படாத வகையில்தனது மத்தியஸ்துவ அணுகுமுறை அமையும் என ராஜீவ் உறுதியளித்தமையை அடுத்து, இதுவரை காலமும் இந்திய வல்லாதிக்கம் குறித்து ஜெயவர்த்தனா கொண்டிருந்த அச்சம் முழுமையாக நீங்கியது. இப்படியாக இந்த முதற் சந்திப்பின் போது இந்திய - இலங்கை உறவில் ஒரு புதிய அணுகு முறைக்கான அத்திபாரம் இடப்பட்டது. அத்தோடு தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திராகாந்தி அம்மையார் கடைப்பிடித்து வந்த நட்புறவுக் கொள்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு ஜனவரி முதற் பகுதியில் நான் பார்த்தசாரதியைப் புதுடில்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன். அவர் விரக்தியுடன் இடிந்து போய் காணப்பட்டார். இந்திராகாந்தியின் திடீர் மறைவும், ராஜீவ் காந்தியின் புறக்கணிப்பும் அவரை ஆழமாகப் பாதித்திருந்தன. ராஜீவ் காந்தியின் ஆட்சிப் பீடம் எத்தகைய புதிய வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போகின்றது என்பது குறித்து அவர் எனக்கு ஒரு விளக்கம் கொடுத்தார். அழுத்தம் கொடுக்கும் கடும் போக்கை விடுத்து, மென்மையான - நட்புறவான - ராஜதந்திர அணுகுமுறையையே புதிய ராஜீவ் அரசு கடைப்பிடிக்கும் என்றார் பார்த்தசாரதி. ஜெயவர்த்தனா நல்லெண்ணம் கொண்டவர் எனத் தவறாகப் புரிந்திருக்கும் ராஜீவ் காந்தி, ஈழத் தமிழரின் பிரச்சினையைச் சமாதானப் பேச்சுகள் மூலமாகத் தீர்த்துவைக்கலாம் என நம்புகிறார் என்றார். தமிழ் விடுதலை அமைப்புகள் பங்கு பற்றும் சமாதானப் பேச்சுகள் விரைவில் ஆரம்பமாகலாம் எனத் தெரிவித்த அவர், இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்குள் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் எடுக்கப்படும் எனவும் விளக்கினார். இந்திரா காந்தியின் இரகசிய இராணுவ உதவித் திட்டம் கைவிடப்படலாம் எனச் சூசகமாகத் தெரிவித்த அவர், பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னராக போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படலாம் எனவும் கூறினார். ஜெயவர்த்தனாவின் ஏமாற்றுகின்ற, சூழ்ச்சிமிக்க, வஞ்சக குணவியல்பு பற்றி எவ்வளவோ சொல்லியும் ராஜீவ் காந்தியை தம்மால் நம்பவைக்க முடியவில்லை என்றார் பார்த்தசாரதி. ஒரு பொதுவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ் போராளி அமைப்புகள் அனைத்தும் ஓரணியில் இணைய வேண்டும் என்றும் சிறிலங்கா அரசுடன் மிகவும் கடினமான - சிக்கலான - பேச்சுகளில் பங்குகொள்ள தமிழர் தரப்பு தயாராக வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார். ராஜீவ் காந்தியின் புதிய நிர்வாகம் கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கை பற்றியும், அணுகுமுறை பற்றியும் இந்தியப் புலனாய்வுத் துறையினர் விரைவில் எமக்கு விளக்குவார்கள் என்றும் பார்த்தசாரதி சொன்னார்.

சென்னை திரும்பியதும் பார்த்தசாரதி கூறிய விடயங்களைப் பிரபாகரனுக்கு விளக்கமாக எடுத்துரைத்தேன். இந்திரா காந்தியின் மறைவை அடுத்து ஆட்சிப் பீடம் ஏறிய ராஜீவ் காந்தி, புதிய வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம் என எதிர்பார்த்திருந்த பிரபாகரனுக்குப் பார்த்தசாரதி தெரிவித்திருந்த விடயங்கள் ஆச்சரியத்தையோ ஏமாற்றத்தையோ கொடுக்கவில்லை.

**ஜெயவர்த்தனா நல்லெண்ணம் கொண்டவர் எனத் தவறாகப் புரிந்திருக்கும் ராஜீவ் காந்தி ஈழத் தமிழரின் பிரச்சினையைச் சமாதானப் பேச்சுக்கள் மூலமாகத் தீர்த்து வைக்கலாம் என நம்புகிறார் என்றார். தமிழ் விடுதலை அமைப்புகள் பங்கு பற்றும் சாமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகலாம் எனத் தெரிவித்த அவர் இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்குள் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் எடுக்கப்படும் எனவும் விளக்கினார். இந்திரா காந்தியின் இரகசிய இராணுவ உதவி திட்டம் கைவிடாலாம் எனச் சுமாகத் தெரிவித்த அவர் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னராக பார் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படலாம் என்றும் கூறினார். ஜெயவர்த்தனாவின் ஏமாற்றுகின்ற, சூழ்ச்சி மிக்க வஞ்சக குணவியல்பு பற்றி எவ்வளவோ சொல்லியும் ராஜீவ் காந்தியைத் தம்மால் நம்ப வைக்க முடியவில்லை என்றார் பார்த்தசாரதி.**




ஜி.பார்த்தசாரதி



ஆயினும் கெரில்லாப் போராட்டத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி, சிங்கள ஆயுதப் படைகளைப் பலவீனப்படுத்தத் திட்டமிட்டுக் கொண்டிருந்த பிரபாகரனுக்கு, அச்சூழ்நிலையில் போர் நிறுத்தம் செய்வது உகந்த தந்திரோபாயமாகத் தெரியவில்லை.

1985 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்தே தமிழீழத்தில் வன்முறைச் சூறாவளி தீவிரம் பெறத் தொடங்கியது. அந்த ஆண்டு ஜனவரி 9 ஆம் நாள், யாழ்ப்பாணம் அச்சுவேலியில் நிகழ்ந்த சுற்றிவளைப்புச் சண்டையில் எமது இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கப்டன் ரவீந்திரன் (பண்டிதர்) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.



கப்டன் ரவீந்திரன் (பண்டிதர்)

ஓர் உளவாளி கொடுத்த தகவலின் பேரில் 500 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அச்சுவேலியில் அமையப் பெற்றிருந்த எமது கெரில்லாப் படைத் தளம் ஒன்றைத் திடீர் எனச் சுற்றி வளைத்தனர். முற்றுகைக்கு ஆளான தளத்தில் இருந்த 15 புலிப்படை வீரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் மத்தியில் உக்கிரமான சண்டை மூண்டது. பெரும் தொகையான இராணுவத்தினரை எதிர்த்து எமது போராளிகள் வீரமுடன் களமாடினர். இந்தச் சண்டையில் கப்டன் ரவீந்திரனும் நான்கு இளம்புலி வீரர்களும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். பத்து புலிவீரர்கள் வீரமுடன் போராடி சிங்கள இராணுவத்தின் முற்றுகை அரணை உடைத்தெறிந்து தப்பிச் சென்றனர். பெரியதோர் இராணுவ முற்றுகையைச் சிறிய குழுவாக முகம் கொடுத்து பல மணி நேரம் போராடி ஈற்றில் பெரும்பாலானோர் முற்றுகையை உடைத்துத் தப்பியமையே பெரும் இராணுவச் சாதனை எனலாம்.

அந்தக் காலகட்டத்தில், கப்டன் இரவீந்திரனின் சாவு எமது இயக்கத்துக்கு ஒரு பேரிழப்பாக அமைந்தது. பண்டிதர் என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் ரவீந்திரன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர் ஆவார். அத்துடன், புலிகள் இயக்கத்தின் நிதிக்கும் ஆயுதப் பராமரிப்புக்கும் பொறுப்பாக இருந்தவர். அரசியல் பரப்புரைப் பணிகளிலும் தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர். வல்வெட்டித்துறைக்கு அருகில் உள்ள கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர், எமது இயக்கத்தின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். ஆஸ்துமா நோயால் அவலப்பட்ட போதும் கடமை உணர்வுடன், இலட்சியப் பற்றுடன், கடுமையாக உழைத்து சக போராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளக்கினார். பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளைச் சுமந்தபோதும் களத்தில் இறங்கிப் போராடவும் அவர் தயங்கவில்லை. தலைவர் பிரபாகரனால் பெரிதும் மதிக்கப்பட்டவர். மிகவும் நெருங்கிய தோழனாகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் செயற்பட்டவர். அவரது சாவு எல்லோரது இதயங்களையும் கலக்கிய ஒரு சோக நிகழ்வு.

(தொடரும்...)

## நிதி மோசடிப் பிரிவில் எம்.பி. ஒருவர்

கொழும்பு, ஜன.18

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியுள்ளார்.

அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காகவே அவர் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியுள்ளார்.

பத்ம உதயசாந்த, மஹிந்த ஆட்சிக் காலத்தின் போது வீடமைப்பு அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளராக இருந்த போதே இந்த மோசடி இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# உயிராபத்து உள்ளது என்று ஏற்கனவே கூறியிருந்தார் லசந்த

### அவரது குடும்பத்தவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.18

மிக் போர் விமானக் கொள்வனவு ஊழலைப் பகிரங்கப்படுத்தியதால், தனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்று, படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க தனது குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.

கல்கிஸை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையின் போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

மிக் கொள்வனவு ஊழலை அம்பலப்படுத்தியமையால் தனது உயிருக்கு ஆபத்து நேரலாம் என்று லசந்த விக்கிரமதுங்க அச்சம் கொண்டிருந்தார் என்று லசந்த குடும்பத்தினர் தம்மிடம் தெரிவித்தனர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

இந்த வழக்கு மீண்டும் மார்ச் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசு பதவியில் இருந்த போது, ஒவ்வொன்றும் 2.462 மில்லியன் டொலர் வீதம், நான்கு மிக் போர் விமானங்களைக் கொள்வனவு செய்ததில், முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று லசந்த விக்கிரமதுங்க அம்பலப்படுத்தியிருந்தார்.

இந்தக் கொள்வனவுகளில் பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாகத் தொடர்புபட்டிருந்தார் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தினசரி ராசி பலன் 18.01.2017

துர்முகிவருஷம் தைமாதம் 5 ஆம் நாள் புதன்கிழமை ஷஷ்டி பகல் 12.49 வரை. பின் ஸப்தமி. அத்தம் இரவு 02.38 வரை. பின் சித்திரை. சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் பகல் 12.20 முதல் 01.47 வரை. சுபநேரம் மாலை 05.06 முதல் 06.36 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி தைமாத தேய்பிறை ஸப்தமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். வெளிவட்டாரப் பழக்கம் சாதகமாக அமையும். தொழில் துறையில் சில சாதனைகளைச் செய்து வருமானம் ஈட்டுவார்கள். வெளிதேச முயற்சி பலன் தரும்.

**ரிஷபம்:** இன்று மகிழ்ச்சியான நாள் ஆகும். பணபலம் அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரம் "ஓஹோ" என்று நடக்கும். வீட்டில் காணாமற்போன பொருள்கள் திரும்பக்கிடைக்கும். மாணவர்களுக்கு தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் சிந்தனை உருவாகும். பணப்பற்றாக்குறை உண்டாகும். செயற்பாடுகளில் தடைதாமதம் ஏற்படும். உறவினர்களால் தொல்லை ஏற்படும் என்பதால் ஒதுங்கி இருப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**கடகம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அதிகரிக்கும். குடும்ப நலம் சுமாராக இருக்கும். வெளிவட்டாரப் பழக்கம் தொல்லை தருவதால் அளவுடன் இருப்பது நன்று. கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. மற்றவர்கள் விஷயத்தில் தலையிடாதிருப்பது நன்று.

**சிம்மம்:** இன்று இன்பமான நாள் ஆகும். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். உத்தியோகத்தில் ஏற்றம் உண்டாகும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். இதுவரை வாடகை வீட்டில் இருந்த சிலருக்கு சொந்த வீட்டுக்கு குடிபோகும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** இன்று இணக்கமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் பாசமும், நேசமும் நிறைந்து காணப்படும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

**துலாம்:** இன்று அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையால் கடன்தேடி அலைவார்கள். உடல் நலக்குறைவு ஏற்படும். மாணவர்கள் தம் பகுதிநேர வகுப்புகளுக்காகத் தகுந்த ஆசிரியரைத் தேடித் திரிவார்கள்.

**விருச்சிகம்:** இன்று அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து ஆடம்பரப் பரிசுப் பொருள்கள் வந்து சேரும். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

**தனுசு:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. தொழில்துறையில் வருவாய் குறைவடையும். வேலைப்பளு அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் தாமதமடையும். உறவினர் வீட்டில் சுபச் செலவுகள் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவேண்டும்.

**மகரம்:** இன்று அனுகூலமான நாள். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். முக்கிய கருமங்களில் இருந்த தடைவிலகும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். திருமணகாரியங்கள் இலகுவில் அனுகூலமாகும். வியாபாரம் நன்கு வளர்ச்சி அடையும்.

**கும்பம்:** இன்று யோசனையான நாள். உடல் ஆரோக்கியம் குறைவடையும். குடும்பத்தில் அமைதி குன்றும். தந்தையால் மருத்துவச் செலவும், அலைச்சலும் இருக்கும். வியாபாரத்தில் தேக்கநிலை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் ஏற்படும்.

**மீனம்:** இன்று விருத்தியான நாள். புதிய வேலை வாய்ப்புகள், ஊதிய உயர்வுகள் விரும்பிய இடமாற்றம் என்பன கிடைக்கும். அசையாச்சொத்து வாங்கும் யோகம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.

சந்திராட்டம நாள்: அவிட்டம் 3, 4 சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் கால்கள். இந்நட்சத்திரங்களில் உதித்தோர் இந்நாளில் நற்கருமங்கள், பிரயாணம் என்பனவற்றைத் தவிர்க்க வேண்டும்.

# தேர்தல் தாமதமாவதற்கு ஆணைக்குழுவே பொறுப்பு

### ஜனசெத முன்னணித் தலைவர் சீலரத்ன தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஜன.18

தேர்தல் நடத்தப்படுவது தாமதப்படுத்தப்படுவதற்கான பொறுப்பை தேர்தல் ஆணைக்குழு ஆணையாளர் பொறுப்பேற்க வேண்டும் என்று ஜனசெத முன்னணியின் தலைவர் பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தலை நடத்த வேண்டிய அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கு இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொகுதி முறையின் அடிப்படையில் நடைபெறும் என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மாத்தறை, ஊருபொக்க பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது தெரிவித்தார். (எ)

## சாலாவ ஆயுதக் கிடங்கு வெடிப்பால் ரூ.1,329 மில். சொத்துகள் சேதம்


கொழும்பு, ஜன.18

கொஸ்கம – சாலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிப்பால் சேதமடைந்த சொத்துக்களின் பெறுமதி ஆயிரத்து 329 மில்லியன் ரூபா என்று அரசு மதிப்பிட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எஸ்.எஸ். மியனவல தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சேதமடைந்த சொத்துக்களுக்கு இதுவரை ஆயிரத்து 41 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தத்துக்கு உள்ளான சிலர் இழப்பீட்டுத் தொகை போதாதென்று குறிப்பிட்டமையால் இரண்டு, மூன்று தடவை மதிப்பீடுகளை மேற்கொள்ள நேர்ந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள இழப்பீட்டுத் தொகையையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)



பளை கோவிற்பற்று தம்பகாமம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீமஹா காளியம்மாள் சங்கர நாராயணன் ஆலய பக்தர்களால் ஏ-9 வீதியால் செல்லும் அடியவர்கள் தரித்துச் செல்லும் வகையில் விஷ்ணு, காளி அம்மன், சிவன் திருவுருவங்கள் அடங்கிய சிற்றாலயம் ஒன்று தைப்பொங்கல் தினத்தில் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-21)

# ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலையில் தமிழை வளர்க்க ஈழத் தமிழன் உதவி

### 2 மில்லியன் டொலரை அள்ளி வழங்கினார்



ரொறன்ரோ, ஜன.18

கனடாவின், ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக்கழகத்தில், தமிழ்மொழி மூலமான கற்கை நெறிகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஈழத் தமிழர் ஒருவரால் இரண்டு மில்லியன் டொலர் நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரான, கலாநிதி ரவி குகதாசன் என்ற ஈழத் தமிழரே இந்த நிதி அன்பளிப்பை வழங்கியுள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு தமிழ்மொழி மூலமான பாடகற்கை நெறிகளை விரிவுபடுத்த முடியும் எனவும், ஈழத் தமிழர்களின் கலை, கலாசாரம் உள்ளிட்டவியங்களைஏனைய சமூகத்தவர்களுக்கு எடுத்துக்காட்ட முடியும் எனவும் அந்தப் பல்கலைக்கழகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேறிய கலாநிதி ரவி குகதாசன், கனடா நாட்டில் குடியேறிய பின்னர், 1978 ஆம் ஆண்டில் ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். 1982 ஆம் ஆண்டில் ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி. பட்டம் பெற்றார். 1986ஆம் ஆண்டில் ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம்பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, 51 ஆண்டு கால வரலாற்றில் பல்கலைக் கழகத்துக்கு தனி நபர் ஒருவரிடம் இருந்து கிடைக்க பெற்ற மிக பெரிய அன்பளிப்பு இதுவே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழருக்கு நீதி கிடைப்பதில் இழுபறி நிலை!

## திரிசங்குநிலையில் நல்லிணக்க அரசு!!

நித்தியபாரதி




அனைத்துலக மட்டத்தில் பெரியளவில் தெரியப்படுத்தப்படாவிட்டாலும்கூட, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்கா மிகப் பெரிய அரசியல் அதிகாரத்துவ ஆட்சியைக் கொண்டிருந்தது. ஜனவரி 2015ல், நாட்டின் அதிகாரத்துவ கடும்போக்கு அதிபரான மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோற்கடிக்கப் பட்டார்.

இதன் மூலம் மூன்றாவது தடவையாகவும் நாட்டின் அதிபராகலாம் என்ற இவரது கனவு சிதைவடைந்தது. இத் தேர்தல் மூலம் இந்த நாடு ஜனநாயக மற்றும் அரசியல் மறுமலர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் என்கின்ற நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது.

எனினும், இந்தப் பயணம் சவால்மிக்கதாகக் காணப் படுகிறது. அத்துடன் தற்போதைய அரசியல் நிலைப் பாடானது இனிவரும் மாதங்களில் இந்த நாட்டின் அரசியல் எவ்வாறானதாக இருக்கும் என்பதைச் சுட்டிநிற்கிறது.

நாட்டின் அரசியல் மாற்றத்திற்கு இடைக்கால நீதி என்பது குறிப்பிடத்தக்கதோர் பங்காகக் காணப்படுகிறது. கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக தற்போதைய அரசு இதயசுத்தியுடன் தீவிரமாக செயற்படாவிட்டால் நாட்டில் அரசியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாது.

மேலும்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசு தற்போதும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை மேற்கொள்ளவில்லை.


1983 தொடக்கம் 2009 வரையான உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், சிறிலங்கா அரசு படைகள், தமிழ்ப் புலிகளுக்கு எதிராக பல்வேறு சண்டைகளை முன்னெடுத்தனர். புலிகள் அமைப்பின் மூத்த தலைமைத்துவம் அழிக்கப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்துடன் இந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 40 ஆயிரம் வரையான உயிர்கள்காவுகொள்ளப்பட்டன என்று நம்பகமான தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இதில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்களாவர்.

2015 ஒக்ரோபர் மாதம் சிறிலங்கா அரசின் இணை ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபையில் சிறிலங்கா மீதான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் போன்றபல்வேறுவிடயங்களை வலியுறுத்தியிருந்தது.

குறிப்பாக, வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய அனைத்துலகப் பங்களிப்புடனான பொறுப்புக் கூறல் பொறிமுறையை சிறிலங்கா உருவாக்க வேண்டும் எனவும் வலியு றுத்தப்பட்டது.

இவ்வாறான பல்வேறு விடயங்களை சிறிலங்கா அரசாங்கம் இன்னமும் நிறைவேற்றவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜூன் மாதம் வழங்கிய நேர்காணல் ஒன்றில், வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை எனத் தெரிவித்திருந்தார். 'அவ்வாறு தேவைப்பட்டால் நாங்கள் வெளிநாட்டு தொழினுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வோம். எந்தவொரு அர்ப்பணிப்போ அல்லது நிபந்தனைகளோ இன்றியே இந்த உதவி பெற்றுக் கொள்ளப் படும்'என்று அவர் தெரிவித்திருந்தார்.



இதன் பின்னர் ஒரு மாதம் கழித்து சிறிலங்காவின் பொறுப்புக்கூறல்பொறிமுறையில் எந்தவொரு அனைத்துலகப் பங்களிப்பும் இருக்காது என சிறிசேன வலியுறுத்தியிருந்தார்.

வேறு சில நிகழ்வுகளில் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பை முதன்மைப் படுத்துவதாகவும் சிறிசேன தெரிவித்திருந்தார். 'எந்தவொரு போர்க் கதாநாயகர்களும் ஆதரவற்றவர்களாக மாறுவதற்கு நான் வழிவகுக்கமாட்டேன்' என்றும் சிறிசேன தெரிவித்திருந்தார். இதேபோன்றே பிரதமர் மற்றும் அரசின் மூத்த அதிகாரிகளும் பொருத்தமற்ற வகையில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

பொறுப்புக்கூறல் என்பது சில காரணங்களைப் பொறுத்தளவில் மிகப்பெரிய தொரு விடயமாகும். இது தொடர்பில் அரசு இன்னமும் பணியாற்றத் தொடங்கவில்லை. அதாவது அனைத்துலக சமூகத்தின் அழுத்தத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்கு கொழும்பானது பொறுப்புக்கூறலை மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, அரசால் புறக்கணிக்கப்படும் மாற்று நீதி நிகழ்ச்சி நிரல் என்பது மிகப் பெரிய தொரு சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது.

மூன்றாவதாக, இந்த நாடானது மீண்டுமொரு யுத்தத்துக்குத் திரும்பிச் செல்லவில்லை என்பதை உறுதிப் படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

இறுதியாக, சிறிலங்காவில் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக நீண்ட காலமாக ஒடுக்கப்படும் தமிழ் சமூகம் நீதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கொழும்பானது தற்போது தனது பொறுப்புக்கூறல் பொறிமுறையைத் தாமதித்து வருவது போல் தெரிகிறது. இதன் ஓர் அங்கமாக தற்போது அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பை, ஜனாதிபதி சிறிசேன தொடர்பு கொண்டு பேசியிருந்தார். அதாவது போர்க் கால குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பாக அனைத்துலக சமூகத்தால் சிறிலங்கா மீது இடப்படும் அழுத்தத்திலிருந்து தனது அரசை விடுவித்துக் கொள்வதற்காகவே டொனால்ட் ட்ரம்ப்புடன் சிறிசேன தொலைபேசியில் தொடர்புகொண்டிருந்தார்.

இதற்கும் அப்பால், பொறுப்புக் கூறல் தொடர்பில் தான் தீவிரம் காண்பிக்கவில்லை என சிறிசேன வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். சிறிலங்கா அரசு தனது நிலை மாறு நீதிச் செயற்பாட்டிற்கு நிலையான அனைத்துலக சமூகத்தின் உதவியை நாடுவதற்கான சிறந்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது.

சிறிலங்காவின் நீதிச் செயற்பாட்டில் அனைத்துலக சமூகம் பங்களிப்பு அரசியல் ரீதியாக உணர்ச்சி மிக்க விடயமாகும். எனினும், கணிசமான அனைத்துலக பங்களிப்பை உள்ளடக்காத எந்தவொரு நடவடிக்கை தொடர்பிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. பல பத்தாண்டு கால பாரபட்சங்கள் மற்றும் பல்வேறு உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் செயற்படுத்தப்பட்ட போதிலும் இவை தமிழ் சமூகத்திற்கு நன்மையளிக்கவில்லை. இதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள அதிகாரத்துவ அரசின் மீது ஆழமான அவநம்பிக்கையைக் கொண்டுள்ளது.

சிறிலங்காவின் பெரும் பான்மை மக்கள் சமூகமாக தமிழ் மக்களும், தமிழ் மற்றும் முஸ்லிம்கள் இரு பெரும் சிறு பான்மை சமூகங்களாகவும் உள்ளனர். சிறி லங்கா இராணுவத்தினர் மீது அவர்களால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக சமூகம் தனது அழுத்தத்தை வழங்கியுள்ள அதே வேளையில், சிறிலங்காவில் இந்தச் சூழலானது முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது.

இவ்வாண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பெரும்பான்மை சமூகத்தின் அதிருப்திக்கு உள்ளாகிவிடக்கூடாது என்பதில்சிறிலங்காஅரசுஉறுதியாக உள்ளது. சிறிலங்கா அரசு பொறுப்புக்கூறல் நடவடிக்கையை முன்னெடுத்தால், அதனுடைய முக்கியத்துவம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கும்.

இதேவேளை, புதியதொரு அரசமைப்பு ஒன்றை வரைவதற்கான தனது ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் சிறிசேன அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு என்பது புதிய அரசமைப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. இது இந்த நாட்டில் நிலையான சமாதானத்தை எட்டுவதற்கான சிறந்த வழிமுறையாக உள்ளது.

### முன்னைய நிலைப்பாட்டில் இருந்து தடம் மாறுகிறார் மைத்திரி

கெட்டவாய்ப்பாக, நிலையான சமாதானத்தின் அவசியமான ஒரு கூறாக அரசியற் தீர்வு, விளங்கும் அதே வேளையில், இவ்வாறு கருதுவதானது தவறான ஒன்றாகக் காணப் படுகிறது. தவிர, அரசாங்கத்தின் அரசியல் சீர்திருத்த முயற்சிகள் மூலம் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டி நிர்வாகத்தை அடிப் படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என எதிர்பார்க்க முடியாது.

இவை மிகவும் கடினமான விடயங்களாகும்.

(16 ஆம் பக்கம் பார்க்க..).

# போராட்டக்காரர்கள் பொலிஸாரால் கைது: அலங்கா நல்லூரில் பதற்றம் தொடர்கிறது!


இரவிரவாகத் தொடர்ந்தது ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜன.18

மதுரை, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், விலங்குகள் நல ஆர்வலர்கள் (பீட்டா) அமைப்பைக் கண்டித்தும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள், ஊர் மக்களை பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாரின் கைது நடவடிக்கையைக் கண்டித்து ஊர்மக்கள் வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு வந்த மாவட்ட பொலிஸ் அதிகாரி பொதுமக்களுடன் பேச்சில் ஈடுபட்டார். இதன்போது, கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். எனவே, வீதி மறியலைக் கைவிட்டு அறவழியில் போராட்டத்தைத் தொடருங்கள். ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்குப் பொலிஸ் அனுமதி கொடுக்கும். வீதி மறியலைக் கைவிட்டுச் செல்லுங்கள் என்று கூறியுள்ளார்.

ஆனால், பொலிஸாரின் சமாதான முயற்சியை ஏற்க மறுத்த பொதுமக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், அலங்கா நல்லூரில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுகிறது.

இதேவேளை, நேற்றுமுன் தினம் காலை, அலங்கா நல்லூரில் சுமார் ஒரு லட்சம் பேர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அப்போது, இளைஞர்கள் காளைகளை அவிழ்த்து விட்டமையால் பொலிஸார் தடியடி நடத்தியுள்ளனர். இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றம் உருவானது.

அலங்கா நல்லூரில் ஜல்லிக்கட்டு நடைபெறாமல் தடுப்பதற்காக ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வாடிவாசலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விழிப்புடன் காவல் இருக்கின்றனர். மேலும், காளை வளர்ப்போரை வீட்டுக் காவலில் வைத்துள்ளனர்.

எனினும், பொலிஸாரின் இந்தக் கண்காணிப்பை மீறி தமிழகம், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெண்கள் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் அலங்கா நல்லூரில் திரண்டனர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் கடையடைப்புப் போராட்டம் மற்றும் வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டதுடன் இளைஞர்கள் வாடிவாசல் முன்பாகக் குவிந்து பீட்டா அமைப்பைக் கண்டித்து தர்ணாவில் ஈடுபட்டனர்.

அப்போது, வாடிவாசல் அருகில் உள்ள முனியாண்டி கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட காளைகளை, ஆர்வ மிகுதியில் சில இளைஞர்கள் அவிழ்த்துவிட்டனர். கூட்டத்தை நோக்கிச் சீறிப் பாய்ந்த காளைகளை இளைஞர்கள் அடக்க முயன்றனர். பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கில் மக்கள் அங்கு கூடியமையால் பெரும் பதற்றம் நிலவியது.

அப்போது சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் வாடிவாசலை நோக்கி காளைகளை ஊர்வலமாக அழைத்துச் சென்றுள்ளனர். பொலிஸாரை மீறி அவர்கள் செல்ல முயன்றதோடு, காளைகளையும் அவிழ்த்து விட்டனர்.

இதையடுத்து, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். கூட்டம் நாலாபுறமும் சிதறியதால் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பொலிஸார் தொடர்ந்து அலங்கா நல்லூர் வீதிகளில் கண்ணில் படுவோரை எல்லாம் தடியடி நடத்தி விரட்டி வருகின்றனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. அலங்காநல்லூரில் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏதும் எழவில்லை எனவும், ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை என்றும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அலங்கா நல்லூரில் போராட்டக்காரர்கள் தொடர்ந்து நகராமல் அங்கேயே தங்கியமையால் அதிரடிப் படையினருடன் மாவட்ட பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்திலேயே முகாமிட்டுள்ளார்.

போராட்டக்காரர்களுடன் பொலிஸாரும், அரச அதிகாரிகளும் அவ்வப்போது சமரச பேச்சு நடத்தி வருகின்றனர். உங்கள் கோரிக்கை குறித்து அரசுக்கு கடிதம் அனுப்புகிறோம் என போராட்டக்காரர்களிடம் உறுதியும் அளித்தனர்.


ஆனாலும், அவர்கள் வாடிவாசல் வழியாகக் குறைந்தது 5 காளைகளையாவது அவிழ்த்து விட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், நீதிமன்ற உத்தரவை மீற முடியாது என பொலிஸார் மறுத்துவிட்டனர்.

போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாதமையால் அதிரடிப் படையினருடன் மாவட்ட பொலிஸ் அதிகாரி தொடர்ந்து சம்பவ இடத்திலேயே முகாமிட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இரவிரவாக தொடர்ந்த போராட்டம் மீண்டும் அதிகாலையிலேயே ஆரம்பமாகியதால் அங்கு தொடர்ந்தும் பதற்றம் நிலவுகிறது.

# அ.தி.மு.கவை உடைக்க பா.ஜ.க. சதி; முதல்வரை மாற்ற அவசியம் இல்லை!

## சசிகலாவின் கணவர் நடராஜன் கூறுகிறார்



சென்னை, ஜன.18

தமிழகத்தின் முதல்வராக உள்ள ஓ.பன்னீர்செல்வத்தை மாற்ற வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்று சசிகலாவின் கணவர் எம்.நடராஜன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நேற்றுமுன் தினம் இரவு நடைபெற்ற தமிழர் கலை இலக்கியப் பொங்கல் நிறைவு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே எம்.நடராஜன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் முதல்வர் பன்னீர்செல்வம் தலைமையில் சிறப்பான ஆட்சி நடைபெறுகிறது. அவரை மாற்றவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

தமிழகத்தைப் பெரும்பான்மையுடன் ஆளும் அ.தி.மு.கவை உடைக்க மத்திய பா.ஜ.க. அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. அவர்களுடைய திட்டம் ஒருபோதும் நிறைவேறாது.

தமிழகத்தைக் காவியமயமாக்கும் பா.ஜ.கவின் எண்ணம் எடுபடாது. அ.தி.மு.கவை உடைக்கும் பிரதமர் மோடியின் எண்ணமும் நிறைவேறாது. கட்சியையும் எங்களையும் அழிக்க நினைக்கும் பா.ஜ.கவை எதிர்கொள்ளத் தயாராக நாத் உள்ளோம்.

தமிழகத்தில் நாங்கள் குடும்ப அரசியல் செய்வோம். மாட்டேன் என்று நாங்கள் ஒரு போதும் சொல்லவில்லை. எம்.ஜி.ஆர்.மறைவுக்குப் பிறகு ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பாக நாங்கள்தான் இருந்தோம். ஜெயலலிதா ராஜினாமா செய்யப் போகிறார் என எழுதிய கடிதத்தை பறித்து வைத்துக் காப்பாற்றியதும் நாங்கள்தான். அவரை முதல்வர் ஆக்கப் பாடுபட்டவரும் நான்தான்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா முதல்வரானமை குறித்து அ.தி.மு.கட்சியினரது எம்.எல்.ஏ.க்கள்தான் முடிவு செய்யவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# எம்.ஜி.ஆரின் நலப் பணிகளை தொடங்குவேன் என்கிறார் தீபா!



சென்னை, ஜன.18

எம்.ஜி.ஆரின் நலப் பணிகளைத் தொடங்குவேன் என்று மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா கூறியுள்ளார்.

சென்னை தியாகராஜ நகரில் உள்ள தனது இல்லத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:


எம்.ஜி.ஆரின் நலப்பணியை விரைவில் தொடங்குவேன். உங்களுக்காக நான் இருக்கிறேன். தொண்டர்களின் எதிர்பார்ப்பு போலவே பொது வாழ்வு அமையும் என்றும் தெரிவித்துள்ளார். இதையடுத்து, ஜெயலலிதாவைப் போன்றே இரட்டை விரல்களைத் தனது ஆதரவாளர்களிடம் தீபா காண்பித்துள்ளார். அப்போது, அனைவரும் அவருக்கு வரவேற்பை வழங்கியுள்ளனர்.

## ஏ.டி.எம்களில் இனி நாளொன்றுக்கு 10 ஆயிரம் எடுக்கலாம்!

டில்லி, ஜன.18


இந்தியா முழுவதும் ஏ.டி.எம்களில் இருந்து எடுக்கப்படும் பணத்தின் அளவை 4,500 ரூபாவிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக ரிசர்வ் வங்கி அதிகரித்துள்ளது.

எனினும், வங்கிகளிலிருந்து வாரந்தோறும் எடுக்கும் தொகையின் அளவை ரிசர்வ் வங்கி அதிகரிக்கவில்லை.



# இஸ்தான்புல் இரவு விடுதி தாக்குதல்; கைதானார் முக்கிய சந்தேகநபர்!





இஸ்தான்புல், ஜன.18

துருக்கி தலைநகர் இஸ்தான்புல் இரவு விடுதியில் 39 பேரைச் சுட்டுக்கொன்ற முக்கிய குற்றவாளியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

துருக்கி தலைநகரான இஸ்தான்புல் நகரையொட்டி ஆர்ட்டாக்கோய் மாவட்டத்தில் அந்த பிரபல இரவு விடுதி அமைந்திருந்தது.

மேலும், ஐரோப்பிய கண்டத்தையும், ஆசியக் கண்டத்தையும் பிரிக்கும் பாஸ்பரஸ் ஜலசந்தி பகுதியை அண்மித்து இந்த விடுதி அமைந்திருந்ததால், உள்நாட்டினரும், வெளிநாட்டினரும் அடிக்கடி ஒன்றுகூடி விருந்து நிகழ்ச்சிகளை நடத்தும் பிரசித்தி பெற்ற இடமாக இது காணப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி இரவு புத்தாண்டை வரவேற்க இந்த இரவு விடுதியில் சுமார் 500 பேர் திரண்டு, மகிழ்ச்சியுடன் காத்திருந்தனர்.

நள்ளிரவு 12 மணிக்கு மேல் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்துடன் உச்சக்கட்ட உற்சாகத்தில் அவர்கள் திளைத்திருந்தனர். அப்போது, இரவு சுமார் 1.30 மணியளவில் தானியங்கி ரகத் துப்பாக்கியுடன் உள்ளே புகுந்த ஒருவர், எதிர்ப்பட்டவர்களை நோக்கிக் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டடில் 35 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டவர்கள் காயங்களுடன் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிகிச்சை பலனின்றி 4 பேர் அடுத்தடுத்து உயிரிழந்தமையால் சாவு எண்ணிக்கை 39 ஆக உயர்ந்தது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபரை பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இஸ்தான்புல் இரவு விடுதியில் 39 பேரைச் சுட்டுக் கொன்ற முக்கிய சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று நேற்றுத் துருக்கி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துருக்கி - ஐரோப்பா எல்லைப் பகுதியான எஸென்யூர்ட் மாவட்டத்தில் உள்ள குடியிருப்புப் பகுதியில் தனது 4 வயது மகனுடன் பதுங்கி இருந்த அபு முஹம்மது ஹொராசானி என்பவரையே பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபர் உஸ்பெகிஸ்தான் நாட்டு வம்சாவளியைச் சேர்ந்தவர் என்றும் அந்தச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

# அமைதிப் பேச்சில் பங்குகொள்ள சிரிய கிளர்ச்சியாளர்கள் சம்மதம்



கஜகஸ்தான், ஜன.18

கஜகஸ்தானில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சில் கலந்துகொள்ளச் சிரியா கிளர்ச்சிக் குழுக்கள் சம்மதம் தெரிவித்துள்ளன.

சிரியா அரசுக்கு எதிராக இஸ்லாமிய மதவாதக் குழுக்கள் உள்ளிட்டோர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்நாட்டில் 2011 ஆம் ஆண்டு முதல் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் மோதல் நடைபெற்று வந்தது.

கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவும் ஆயுத உதவியும் கிடைத்து வந்தது.

சிரியா அரசுக்கு ஆதரவாக ஈரான், ரஷ்யா, லெபனான் ஆகிய நாடுகள் களமிறங்கின. ஆறு ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டு போரில் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

சிரியாவில் நிலவும் குழப்பமான அரசியல் சூழலின் இடையே, இஸ்லாமிய தேச பயங்கரவாதிகள் அந்நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர்.

அதேபோல், கிளர்ச்சியாளர்களும் சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். முக்கியத்துவம் வாய்ந்த அலெப்போ நகரையும் அவர்கள் கைப்பற்றினர்.

கடுமையான தாக்குதலுக்குப் பிறகு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலிருந்து அலெப்போ நகரைச் சிரியா அரசு அண்மையில் மீட்டது.

இதையடுத்து, போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் ரஷ்யா முன்னிலையில் சமாதானப் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டது.

அந்தப் பேச்சில் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாகக் கிளர்ச்சிக் குழுக்கள் தெரிவித்தன. ஆனாலும் ஒரு சில குழுக்கள் கருத்து வெளியிடாமல் இருந்தன.

இந்நிலையில், ஜெய்ஷ் அல்-இஸ்லாம் (இஸ்லாமிய இராணுவம்) என்ற குழு பேச்சில் கலந்து கொள்வதற்கு நேற்று முன்தினம் சம்மதம் தெரிவித்துள்ளது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள போர் நிறுத்தம் கிளர்ச்சிக் குழுக்களுக்கு மட்டுமே பொருந்தும்.

பேச்சு இம்மாதம் 23 ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்த சமாதானப் பேச்சில் அமெரிக்காவும் கலந்து கொள்ளவேண்டும் என்று ரஷ்யா கூறி வருகிறது.

ஆனால், அமெரிக்கா தனது சம்மதத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

# சந்திர மண்டலத்துக்கு கடைசியாகச் சென்றவர் காலமானார்!





வொஷிங்டன், ஜன.18

சந்திரனுக்கு இதுவரை சென்றவர்களில் கடைசியாகச் சென்ற விண்வெளி வீரரான எயூஜின் கெர்னான், நேற்று அமெரிக்காவில் மரணமடைந்துள்ளார்.

அமெரிக்க விண்வெளி வீரரான எயூஜின் கெர்னான் 1972 ஆம் ஆண்டு அப்பலோ 17 விண்கலத்தில் சந்திரனுக்குச் சென்று, அங்கு தங்கி சில ஆய்வுகளை மேற் கொண்டார்.

இதுவரை சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வீரர்களில் கடைசியாக அங்கு ஆய்வுகளைச் செய்தவர் என்னும் பெருமைக்குரியவராக எயூஜின் கெர்னான் திகழ்ந்தார்.

அவர், உடல் நலக்குறைவால் தனது 82 ஆவது வயதில் டெக்சாஸ் மாநிலத்தின் ஹூஸ்டன் நகரில் உள்ள மருத்துவமனையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

எயூஜினின் மரணத்துக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான 'நாசா' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது. நிலவில் கடைசியாக நடந்த மனிதன் என்ற பெருமை என்னோடு முடிந்துவிடக் கூடாது, வருங்காலத் தலைமுறையினரும் சந்திர மண்டலத்துக்கான பயணங்களைத் தொடர வேண்டும் என எயூஜின் தெரிவித்திருந்தார் என்று அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எயூஜின், தனது 82 வயதிலும் விண்வெளி பயணம் குறித்த ஆலோசனைகளை நாட்டுத் தலைவர்களுக்கும், இளம் மாணவர்களுக்கும் வழங்கி வந்திருந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# ஏமன் உள்நாட்டு போரில் 10 ஆயிரம் பேர் உயிரிழப்பு!

ஐ.நா. தகவல்



ஏடன், ஜன.18

ஏமன் உள்நாட்டுப் போரில் 10 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர் என்று ஐ.நா. தகவல் தெரிவித்துள்ளது.

ஏமனில் அரசுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகிறது.

தலைநகர் கனா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி தனி அரசு நடத்தி வருகின்றனர்.



எனவே, ஜனாதிபதி மன்சூர் ஹாதி ஏடனைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தி வருகிறார். இவருக்குச் சவூதி ஆதரவு கூட்டுப்படைகள் ஆதரவு அளித்துள்ளன.

இதனால் கிளர்ச்சியாளர்களுக்கும், சவூதி கூட்டுப்படை ஆதரவு பெற்ற இராணுவத்துக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

21 மாதங்களாக நடைபெறும் உள்நாட்டுப் போரில் இதுவரை 10 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். 40 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தத் தகவலை ஐ.நா. தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்துள்ளதால் இலட்சக் கணக்கான மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது. சுமார் 70 லட்சம் பேர் அடுத்த வேளை உணவு கிடைக்காமல் தவிக்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் விமானப்படை மூத்த அதிகாரி கைது !

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பெறுமதியான வெளிநாட்டு மதுபான போத்தல்களை கொண்டு செல்ல முயற்சித்த குற்றச்சாட்டில் இலங்கை விமானப்படையின் மூத்த அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரைப் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் சட்டவிரோதமாக மதுபானப் போத்தல்களை வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல முயற்சித்துள்ளார். இதன்போது அவரிடம் மேற்கொண்ட சோதனைகளின் போதே குறித்த மதுபானப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ)

# கூட்டு எதிர்க்கட்சியைத் தோற்கடிக்க முயற்சித்து வருகிறாராம் சந்திரிகா!

கொழும்பு, ஜன.18

கூட்டு எதிர்க்கட்சியைத் தோற்கடிக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா முயற்சித்து வருகிறார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுமாறு அமைச்சர் திகாம்பரத்துக்கு சந்திரிகா அழைப்பு விடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியைத் தோற்கடிக்க உதவுமாறு சந்திரிகா இதன்போது கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகிறது. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது பெருந் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றது.

இதன் காரணமாக தொழிலாளர் தேசிய காங்கிரஸின் தலைவர் பழனி திகாம்பரத்துடன் சந்திரிகா பேச்சு நடத்தியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தை இணைத்து கூட்டணியாக போட்டியிடுவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## கொழும்பில் கம்பன் விழா பெப்ரவரி 9 முதல் 12 வரை

### இராமகிருஷ்ண மண்டபத்தில்

கொழும்பு, ஜன.18

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் வருடாந்தக் கொழும்பு கம்பன் விழா இவ்வாண்டு பெப்ரவரி 9,10,11,12 ஆகிய நான்கு நாள்களில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெப்ரவரி 9 அன்று மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்யலக்சுமி திருக் கோயிலிலிருந்து கம்பன் பட ஊர்வலத்துடன் ஆரம்பமாகவுள்ள இவ்விழாவில் அரசியல் தலைவர்கள், சமூகப் பிரமுகர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களைத் தவிர உள்நாட்டிலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல தமிழ் ஆர்வலர்கள் பேராளர்களாகவும் இவ் விழாவில் பங்கேற்கின்றனர்.

இவ்விழாவில் வழமை போலவே நாவலர் விருது, விபுலானந்தர் விருது, மகரயாழ் விருது, ஏற்றமிகு இளைஞர் விருது, நுழைபுல ஆய்வு விருது என்பவை வழங்கப்படவுள்ளன. அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சுப்போட்டி, அமரர் பொன் பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி, அமரர் இ. நமசிவாய தேசிகர் ஞாபகார்த்த மனனப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் படவுள்ளன.

காலை, மாலை நிகழ்வுகளாக அமையவுள்ள இவ் விழா நிகழ்ச்சிகளில் பட்டிமண்டபம், இலக்கிய ஆணைக்குழு, கவியரங்கம், இன்று சந்திக்கும் இவர்கள், விவாத அரங்கு, மேன்முறையீட்டுப் பட்டிமண்டபம், வழக்காடுமன்றம், சிந்தனை அரங்கம், தனியுரை என்பவை இடம்பெறவுள்ளன. விழாவின் நிறைவு நாளில் உலகளாவி தமிழ்ப் பணி செய்யும் ஓர் சான்றோர்க்கு கம்பன் புகழ் விருது வழங்கப்படுவதோடு நம் நாட்டின் பல துறைகள் சார்ந்து சமூகத் தொண்டாற்றிய ஆறு அறிஞர்களுக்கான கௌரவமும் வழங்கப்பட உள்ளன.

விழா நாளில் கழகத்தின் சார்பில் நூல் வெளியீடு, இறுவட்டு வெளியீடு என்பவையும் இடம்பெறவுள்ளன. இவ் விழாவில் அனைத்துத் தமிழ் ரசிகர்களையும் கலந்து கொள்ளுமாறு கம்பன் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். தனிப் பட்ட அழைப்பிதழ்கள் பெற விரும்புவோர் இல.12, இராம கிருஷ்ணதோட்டம், கொழும்பு-06 எனும் முகவரிக்கு தம் முகவரியைத் தெரிவித்துக் கடிதம் வரையின் அவர்களுக்கான அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் கல்லூரிகள் தமது மாணவர்களை அழைத்துவர விரும்பின் மேல் முகவரியுடன் தொடர்பு கொண்டால் விழா மண்டபத்தில் அவர்களுக்கான இட ஒதுக்கீடு செய்து தரப்படும் என்றும் கழகம் அறிவித்துள்ளது. (இ)

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழிசைப் போட்டி

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் தமிழிசை விழா இந்த மாதம் நடைபெறவுள்ளது. இசை கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கு முகமாக நாடளாவிய ரீதியில் இசைப் போட்டியொன்றை இந்தவருடமும் அது நடத்தவுள்ளது.

### தமிழிசைப் பாடற் போட்டி - 2017

★ போட்டி தொடர்பான விவரங்கள் - போட்டிக்கான பாடல் தெரிவுகள் - அ. தமிழிசைப் பாடல்கள் மட்டும் உதாரணமாக, (அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், தண்டபாணிதேசிகர், கோபாலகிருஷ்ணபாரதியார், நீலகண்டசிவன், சுத்தானந்த பாரதியார், பெரியசாமித்தூரன், வள்ளலார், வீரமணிஐயர் முதலியோர் இயற்றியவை).

பிரிவு 1 - தரங்கள் 4, 5 - தேவாரம் / துதிப்பாடல் ஒன்று (பண்ணுடன் பாடுதல்), சிறுவர் பாடல் - ஒன்று

நேரம் 4 - 5 நிமிடங்கள் பாடுதல் வேண்டும்.

பிரிவு 2 - தரங்கள் 6, 7, 8 - இலகுவான கீர்த்தனை - ஒன்று (சிட்டைஸ்வரம் தவிர்க்கப்படல் வேண்டும்), திருப்புகழ் - ஒன்று நேரம் 4 - 6 நிமிடங்கள் பாடுதல் வேண்டும்.

பிரிவு-3 - தரங்கள் 9, 10, 11 -கீர்த்தனை - ஒன்று (சிட்டைஸ்வரத்துடன் பாடலாம்), பதம் - ஒன்று, நாட்டார் பாடல் - ஒன்று நேரம் 8 - 10 நிமிடங்கள் பாடுதல் வேண்டும்.

பிரிவு - 4 - தரங்கள் 12, 13 - தமிழ் வர்ணம் - ஒன்று (ஆதி தாளத்தில் அமைந்தது, இரண்டு காலங்களில் பாட வேண்டும்), கீர்த்தனை - ஒன்று (கற்பனா ஸ்வரத்துடன் பாடலாம்), திருப்புகழ் - ஒன்று நேரம் 12 - 15 நிமிடங்கள்.

★ போட்டி விதிகள் - விண்ணப்பத்தில் தமிழிசைப் போட்டி 2017 எனத் தலைப்பிட வேண்டும். முழுப்பெயர், முகவரி, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர், தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம், கல்வி கற்கும் பாடசாலையின் பெயர், 2017 இல் கற்கும் வகுப்பு, விண்ணப்பிக்கும் பிரிவு முதலான விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தையொப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். தங்கள் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக சங்கத் தொலைபேசி ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ உறுதிப்படுத்திக் கொள்ளவும். தொலைபேசி இல - 011 2363759

★ ஏனையவை- போட்டிக்கு சமுகமளிக்கும் போது அதிபரால் வகுப்பு உறுதிப்படுத்திய கடிதம் எடுத்துவரப்படல் வேண்டும், போட்டியாளர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமொன்றைக் காட்டவேண்டும், போட்டியாளர் கலாசார உடையுடன் பங்குபற்றல் வேண்டும், பயணச் செலவு சங்கத்தால் வழங்கப்பட மாட்டாது, சுருதிக்கான கருவியை போட்டியாளரே கொண்டுவர வேண்டும், நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது, வெற்றியாளர்களுக்கு தமிழிசைவிழா நடைபெறும் தினங்களில் பெறுமதி வாய்ந்த பரிசில்கள், சான்றிதழ், பாடும் வாய்ப்பு என்பன வழங்கப்படும், போட்டி நடைபெறும் இடங்கள் விண்ணப்பங்களது எண்ணிக்கையைப்பொறுத்துத்தீர்மானிக்கப்படும் என்று பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி தெரிவித்துள்ளார். (ஐ)

## முதியோருக்கான கொடுப்பனவு வந்து சேர்ந்தன

சாவகச்சேரி, ஜன.18

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சல் அதிபர்கள் அறிவித்திருக்கிறார்.

## தமிழருக்கு நீதி...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனால் சிறிலங்காவின் தற்போதைய அரசில் பல்வேறு பின்னடைவுகள் காணப்படுகின்றன. இவற்றுக்கப்பால், கொழும்பு 2015 ஒக்ரோபர் மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய வாக்குறுதிகளைநிறைவேற்றுவது தொடர்பில் காத்திரமான நகர்வுகளை முன்னெடுத்தால் அது வரவேற்கத்தக்கதாகும்.

அனைத்துலகப் பங்களிப்பை உள்ளடக்கிய இடைக்கால நீதிச் சேவை என்பது இந்த நாட்டுக்கு ஏன் முக்கியமானது என்பதை சிறிலங்கா அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் மக்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம் இந்த முயற்சியை ஆரம்பிக்க முடியும். தமிழ் அரசியற் கைதிகளை உடனடியாக விடுவித்தால் அது ஊக்கமளிக்கும் ஒரு செய்தியாக இருக்கும்.

அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலங்களை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளித்தலும் நாட்டில் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும்.

சிறிலங்காவின் இடைக் கால நீதித் திட்டங்கள் தொடர்பாகவும் அரசின் பொறுப்புக்கூறல் நிலைப்பாடு தொடர்பாகவும் அதிருப்தி காணப்படுகிறது.

இவை தொடர்பாக தேசிய அரசு மீளவும் ஆராய்ந்தால், நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை விரைவில் எட்ட முடியும். இவை மிகவும் வேகமாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுக்கப்படவேண்டும். நன்றி- புதினப்பலகை

## மஹிந்தவைச் சந்திக்கவுள்ள மாகாண முதலமைச்சர்கள்

கொழும்பு, ஜன.18

நாட்டின் மாகாண முதலமைச்சர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க தீர்மானித்துள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் முதலமைச்சர்கள் முன்னாள் மஹிந்தவைச் சந்திக்கத் தீர்மானித்துள்ளனர் என்று அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை மாகாண முதலமைச்சர்கள் கூடி பேச்சு நடத்தியுள்ளனர். இதன் போது மஹிந்தவைச் சந்திக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைக்கு மாகாண முதலமைச்சர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்திப்பு நடத்த மஹிந்தவிடம் திகதி ஒன்றை ஒதுக்கிக் கொண்டு, இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு சபரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை முதலமைச்சர்கள் சந்திக்க விரும்புகின்றனர் எனத் தெரிவிக்கும் செய்தி மஹிந்தவை சென்றடைந்துள்ளது. இந்த சந்திப்பை நடத்த மஹிந்தவும் இணக்கம் வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவே முதலமைச்சர்கள், மஹிந்தவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் அறிவிக்கப்பட உள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# அஸ்வினின் தவிப்பு!




சென்னை, ஜன.18

இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின் கடந்த ஒரு ஆண்டாக ஒருநாள் அரங்கில் விக்கெட் கைப்பற்ற முடியாமல் தவித்து வருகிறார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின்.

டெஸ்ட் அரங்கில் ஜொலிக்கும் நட்சத்திரமாக உள்ள இவருக்கு கடந்த ஆண்டு மிகவும் வெற்றிகரமானவே அமைந்தது.

குறிப்பாக, இங்கிலாந்து அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மூன்று முறை ஆட்டநாயகன் விருதை வென்றார்.

இத்தொடரில் தொடர் நாயகன் விருது, இவருக்கு வழங்காமல், அணித் தலைவர் கோஹ்லிக்கு வழங்கப்பட்டது ஒரு பக்கம் பெரும் சர்ச்சையாகவே வெடித்தது.

இருப்பினும் ஜாம்பவான்களான சச்சின், ராவிட் ஆகியோருக்கு அடுத்தபடியாக சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் விருதை அஸ்வின் வென்றார்.


இரண்டாவது குழந்தைக்கு தந்தையான பின் ஆண்டு முழுதும் அஸ்வினுக்கு சிறந்த ஆண்டாகவே அமைந்தது.

இப்படி டெஸ்ட் அரங்கில் கொடிகட்டி பறந்த அஸ்வின் ஒருநாள் கிரிக்கெட்டில் கடந்த 2016 இல் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 2 ஒருநாள் போட்டியில் மட்டும் பங்கேற்று 2 விக்கெட்டுகளை மட்டுமே கைப்பற்றினார்.

தற்போது இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ரவீந்திர ஜடேஜாவுடன் ஜோடி சேர்ந்த இவர், 8 ஓவர்கள் வீசி 63 ஓட்டங்கள் கொடுத்து விக்கெட் வீழ்த்த தவறினார்.

சமீபகாலமாக ஒருநாள் போட்டிகளில் பங்கேற்காததும் இவரால் விக்கெட் கைப்பற்றமுடியாமல் போனமைக்கு ஒருகாரணமாகும். இதை இந்த ஆண்டிலாவது அஸ்வின் மாற்றி எழுதுவார் என ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: 2 ஆவது சுற்றில் செரீனா!



மெல்போர்ன், ஜன.18

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையும், ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை 6 முறை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) தொடக்க சுற்றில் சுவிற்சர்லாந்தை சேர்ந்த பெலின்டா பெனிக்கை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில், செரீனா 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் 5 ஆம் நிலை வீராங்கனையான கரோலினா பிலிஸ்சோவா (செக்குடியரசு), 6-2, 6-0 என்ற நேர் செட் கணக்கில் சாராவை (ஸ்பெயின்) வீழ்த்தினார்.

மற்றுமொரு போட்டியில், உலகின் 3 ஆம் நிலை வீரரான மிலோஸ் ரோனிக் (கனடா) முதல் சுற்றில் ஜேர்மனியைச் சேர்ந்த டஸ்டின் பிரவுனை எதிர்கொண்டார். இந்தப் போட்டியில் ரோனிக், 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றுள்ளார்.

மேலும், 9 ஆம் நிலை வீராங்கனை ஜோகன்னா (இங்கிலாந்து) 21 ஆம் நிலை வீராங்கனை கரோலின் கார்சியா (பிரான்ஸ்), ஷரபோவா (செக்குடியரசு), மகரோவா (ரஷ்யா) ஆகியோரும் வென்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

# தனிப்பட்ட சாதனைகளுக்காக விளையாடவில்லையாம் சங்கா!



கொழும்பு, ஜன.18

எனது தனிப்பட்ட சாதனைகளுக்காக விளையாடவில்லை என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

ரசிகர் ஒருவரின் கேள்விக்கு அவர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ரசிகர்கள் என்னிடம் நீங்கள் ஏன் இன்னும் 2 ஆண்டுகள் கூடுதலாக விளையாடவில்லை, 15 ஆயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி நகரவில்லை' என்று பல கேள்விகளை கேட்கிறார்கள்.

ஆனால், நான் ஓய்வு பெற வேண்டும் என்று மட்டுமே முடிவெடுத்தேன். எனது முன்னால் இருக்கும் எந்தவொரு விடயத்தையும் நான் பார்க்கவில்லை.

நான் எனது தனிப்பட்ட சாதனைகளுக்காக விளையாடி இருந்தால் அந்தக் கேள்விகளுக்கு எல்லாம் கண்டிப்பாக பதிலளிக்க முடியும். ஆனால் நான் அணியின் வெற்றிகளுக்காகவே விளையாடினேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வி குறித்து கவலை அடைவதுடன், அணிக்காக சிறப்பான பங்களிப்பு அளித்த பின்னர் ஓய்வு பெற்றதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# அடுத்த சுற்றில் ரபேல் நடால்!

மெல்போர்ன், ஜன.18

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் முதல் சுற்றில் ரபேல் நடால், ப்ளோரியன் மேயரை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற முதல் சுற்றுப் போட்டியின் முடிவில் 6-3, 6-4, 6-4 என்ற நேர்செட் கணக்கில் ரபேல் நடால், ப்ளோரியன் மேயரை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

இதே ஜோடி கடந்த 2012 ஆம் ஆண்டு ரோமில் நடந்த போட்டியில் மோதிய போது, அதிலும் நடால் வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஹோட்டலில் தங்குவதற்கு அறைகள் இல்லை: இந்திய வீரர்கள் கட்டாக் செல்வதில் தாமதம்!



கட்டாக், ஜன.18

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 2 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒடிசா மாநிலம் கட்டாக்கில் நாளை இடம்பெறவுள்ளது.

ஆனால், அங்கு வீரர்கள் தங்குவதற்கு ஹோட்டல் அறைகள் கிடைக்காததால் அவர்கள் கட்டாக் செல்வது ஒரு நாள் தாமதம் ஆகியுள்ளது.

திருமண நிகழ்ச்சிக்காக அங்குள்ள அறைகள் ஏற்கனவே மொத்தமாக முன்பதிவு செய்யப்பட்டு விட்டன. இன்று புதன் கிழமை காலையில் இருந்து தான் அறைகள் தாராளமாகக் கிடைக்கும் என்று ஹோட்டல் நிர்வாகம் கூறியுள்ளது.

இதனால், நேற்று வரை முதலாவது ஒரு நாள் போட்டி நடந்த புனேயிலேயே தங்கி இருக்கும்படி வீரர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இன்று காலை வீரர்கள் கட்டாக்குக்கு செல்வார்கள் என்றும், மாலையில் பயிற்சியில் ஈடுபடுவார்கள் என்றும் ஒடிசா கிரிக்கெட் சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனேயில் இடம்பெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்தியா 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, தொடரில் 1-0 என முன்னிலையில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சச்சினின் சாதனையை முறியடிப்பது கடினம் என்கிறார் விராட் கோஹ்லி



மும்பை, ஜன.18

கிரிக்கெட் சகாப்தமான சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பது சாத்தியமில்லை என்று இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் விராட் கோஹ்லி சதம் அடித்து முத்திரை பதித்தார். 177 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடி 27 ஆவது சதத்தை பதிவு செய்தார்.

2 ஆவது இன்னிங்ஸில் அதாவது பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியதில் விராட் கோஹ்லி 17 செஞ்சரியை எடுத்து டெண்டுல்கர் சாதனையை சமன் செய்தார். இதில் வெற்றிகரமான பதில் துடுப்பெடுத்தாட்டத்தில் அதிக சதம் (15) எடுத்த சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்தார்.

விராட் கோஹ்லிக்கு தற்போது 28 வயதுதான் ஆகிறது. இதே திறமையுடன் தொடர்ந்து 10 ஆண்டுகள் விளையாடினால் அவர் சச்சின் டெண்டுல்கரின் அனைத்து சாதனைகளையும் தகர்ப்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த நிலையில் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பது சாத்தியமில்லை என்று விராட் கோஹ்லி கூறியுள்ளார்.

இது தொடர்பாக கிரிக்கெட் சபை இணையதளத்துக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கிரிக்கெட்டின் சகாப்தமான சச்சின் டெண்டுல்கருடன் என்னை ஒப்பிட்டு வருவது எந்த விதத்திலும் நியாயமில்லை.

அவரை போன்று 24 ஆண்டுகாலம் 200 டெஸ்ட் மற்றும் 463 ஒருநாள் போட்டிகளில் விளையாட இயலாது. 100 சதம் அடிக்க முடியாது. அவரது சாதனைகள் நம்ப முடியாதவை.


சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பது மிகவும் கடினம். அவரது சாதனையை எட்டுவது சாத்தியமில்லை.


ஆனால், நான் அதிலும் மாறுபட்டவனாக இருக்கவே விரும்புகிறேன். நான் போட்டியை விட்டு செல்லும்போது சிறப்பான நிலையிலேயே செல்வேன்.


நெருக்கமான நபர்கள் நிறையபேர் நம்மை சுற்றி வைத்துக்கொள்ளும்போது கவனம் சிதற வாய்ப்பு உள்ளது. மேலும் அதற்காக கூடுதல் நேரத்தையும் செலவிட வேண்டிவரும்.

அதனால்தான் அதிர்ஷ்டவசமாக நெருக்கமான நிறையபேரை நான் வைத்துக் கொள்ளவில்லை. இதுவே எனது வெற்றியின் இரகசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: முன்னணி வீரர்கள் வெற்றி!







மெல்பேர்ன், ஜன.18

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் முன்னணி வீரர்களான பிரிட்டனின் அன்டி முர்ரே, சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்டன் வாவ்ரிங்கா ஆகியோர் தங்களது முதல் சுற்று ஆட்டத்தில் போராடி வெற்றி பெற்றுள்ளனர்.

ஆண்டின் முதலாவது கிராண்ட் ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்னில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் உலகின் முதல்நிலை வீரரான பிரிட்டனின் அன்டி முர்ரே, உக்ரைனின் இலியா மார்சென்கோவை எதிர்கொண்டார்.

2 மணி நேரம் 45 நிமிடங்கள் வரை நீடித்த இந்த ஆட்டத்தின் முடிவில் முர்ரே, 7-5, 7-6 (7/5), 6-2 என்ற செட் கணக்கில் மார்சென்கோவை போராடி வீழ்த்தினார்.

மற்றுமொரு போட்டியில், 3 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றவரான சுவிற்சர்லாந்தின் ஸ்டன் வாவ்ரிங்கா, தரவரிசையில் 35 ஆவது இடத்திலுள்ள ஸ்லோவாக்கியாவின் மார்ட்டின் கிளிசானை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில், சுமார் 3 மணி நேரம் 24 நிமிட போராட்டத்துக்குப் பின்னர், 4-6, 6-4, 7-5, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் வாவ்ரிங்கா, கிளிசானை வீழ்த்தினார்.

அதேபோல், சுவிற்சர்லாந்தின் மற்றொரு முன்னணி வீரரும், 17 முறை கிராண்ட் ஸ்லாம் சம்பியனுமான ரோஜர் பெடரர், ஆஸ்திரேலியாவின் ஜூர்ஜென் மெல்சரை 7-5, 3-6, 6-2, 6-2 என்ற கணக்கில் போராடி வீழ்த்தியுள்ளார்.

35 வயதான பெடரர், முழங்கால் காயம் காரணமாக கடந்த ஆண்டில் 7 போட்டித் தொடர்களில் பங்கேற்கவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், களம் கண்ட அவர் தனது முதல் ஆட்டத்தில் போராடியே வென்றுள்ளார்.

# ஓய்வு பெறுகிறார் டி வில்லியர்ஸ்?

எலிசபெத், ஜன.18

தென்னாபிரிக்காவின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ஏபி டி வில்லியர்ஸ், டெஸ்ட் போட்டிகளில் ஓய்வை அறிவித்து விட்டு தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட (ஒருநாள், இருபதுக்கு 20) போட்டிகளில் தன் கவனத்தை செலுத்த உள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஏபி டிவில்லியர்ஸ் நீண்டகாலமாக முழங்கை உபாதையால் அவதிப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 2016 இன் நடுப்பகுதியிலிருந்து போட்டிகளில் பங்கெடுக்கவில்லை. டெஸ்ட் அணித் தலைவர் பதவியிலிருந்து தானாக விலகியிருந்தார். அப்பதவியை தற்போது டு பிளெஸிஸ் வகிக்கிறார்.

இந்நிலையில், இவர் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பாரா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

இது குறித்து தற்போதைய அணித்தலைவர் டு பிளெஸிஸ் தெரிவித்தவை வருமாறு:-

டிவில்லியர்ஸ் தொடர்ந்து ஒருநாள் போட்டிகளில் விளையாட முடிவு செய்துள்ளமை மகிழ்ச்சியான விடயம்.

அதேபோல் அவர் எங்களுக்காக டெஸ்ட் போட்டிகளிலும் தொடர்ந்து பங்கேற்பார் என நம்புகிறேன்.

அவர் ஒரு உலகத்தரமான துடுப்பாட்ட வீரர், அவ ரைப்போன்ற வீரர் அணி யில் இடம் பெற்று வெற் றியை தேடித்தர வேண்டும் என்றே ஒரு தலைவராக உணர்கிறேன் என்று கூறியுள்ளார்.

32 வயதான டி வில்லியர்ஸ் மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு இலங்கையுடான 3 ஆவது இருபதுக்கு 20 போட்டியின் போது திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக தென்னாபிரிக்காவின் பயிற்சியாளர் தெரிவிக்கையில், வில்லியர்ஸுடன் இணைந்து அவரின் எதிர்காலத்தை திட்டம் இடவேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.

வில்லியர்ஸ் 12 வருடங்களுக்கு மேலாக டெஸ்ட் கிரிக்கெட் ஆடி 106 போட்டிகளில் 8074 ஓட்டங்களை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# எம்.ஜி.ஆரின் 100 ஆவது பிறந்தநாள் நேற்று யாழ்ப்பாணத்திலும் நிகழ்வுகள்

## கல்வியங்காட்டில் உடுபுடவைகளும் அன்பளிப்பு

- எஸ்.நிதர்சன் -

தமிழக முன்னாள் முதல்வரும் தென்னிந்திய நடிகருமான அமரர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 100 ஆவது பிறந்த தினமான நேற்று யாழ்.மாவட்டத்தின் பல இடங்களிலும் அவருக்கான நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

கல்வியங்காடு, குருநகர், பாஷையூர் மற்றும் வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி ஆகிய இடங்களில் எம்.ஜி.ஆர். நினைவு கூரப்பட்டார்.

கல்வியங்காட்டில், எம்.ஜி.ஆரின் நண்பனும் தீவிர ரசிகனுமான 'யாழ். எம்.ஜி.ஆர்.' என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில், அவரது சொந்த நிதியில் அமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். சிலைக்கு முன்பாக பிறந்ததின நினைவு இடம்பெற்றது.



இந்தநிகழ்வில்யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது எம்.ஜி.ஆர். சிலைக்கு கோப்பாய் சுந்தரலிங்கம் மலர் மாலை அணிவித்து தீபம் காட்டி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து ஏனையோர் மலர்மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், கோப்பாய் சுந்தரலிங்கம் தனது சொந்த நிதியில் கொள்வனவு செய்த உடுபுடவைகள் முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர் சிலருக்கு வழங்கப்பட்டன.

இதைவிட, குருநகர், பாஷையூரில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். திருவுருவச் சிலைகளுக்கு முன்பாகவும் பிறந்தநாள் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்று மாலை 5.30 மணியளவில் வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு முன்பாகவும் நிகழ்வுகள் நடைபெற்றன. இங்கு ஏற்கனவே இருந்த சிலை அழிவடைந்ததைத் தொடர்ந்து தற்போது புதிய சிலை அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-07-30)

# அன்னை தெரேஸா நினைவு கூரல் வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில்

## சம்பந்தனும் கலந்து கொள்கிறார்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம், யாழ். மறைமாவட்ட கத்தோலிக்கத் திருச்சபை ஆகியன இணைந்து நடத்தும் 'அன்னை தெரேஸா – இன்று கல்கத்தாவின் புனிதர்' என்னும் தொனிப்பொருளில் நினைவு கூரல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வுகள் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு , யாழ். பிரதான வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில் அமைந்துள்ள 'பாது காவலன்' மண்டபத்தில் இடம்பெறும்.

அமெரிக்க மிக்சிகன் மாநிலப் பல்கலைக்கழக இரசாயன இயந்திரவியல் துணைப் பேராசிரியர் கலாநிதி துஷ்யந்தி ஹீல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக யாழ். ஆயர் வண.ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன், இலங்கைத் திருச்சபை யாழ். குரு முதல்வர் சாமுவேல் பொன்னையா, யாழ்.பல்கலைக் கழக வேந்தர் சி.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

அன்னை தெரேஸாவின் சுயசரிதைப் புத்தகத்தை அன்னையின் சார்பில் எழுதியவரும், இந்தியாவின் முன்னாள் அரசுச் செயலாளரும், முன்னாள் தலைமைச் செயலா ளருமான நவீன் பி சால்வாவும் இந்நிகழ்வில் உரையாற்றுவர்.

ஆசியுரையை வண.பிதா பேராசிரியர் ஞானமுத்து பிலேந்திரன் வழங்குவர்.

இந்த நிகழ்வில் இலங்கையின் தேர்தல்கள் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பங்குபற்றுவார் என ஒரு தகவல் தெரிவித்தது. (உ)

# வறட்சியால் 6 இலட்சம் பேர் வரை பாதிப்பு

கொழும்பு,ஜன.18

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை காரணமாக ஆறு இலட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவமத்தியநிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடுப்பிலி தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டின் 13 மாவட்டங்கள் இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,வறட்சியைக்கருத்தில் கொண்டு நீர், மின்சாரம் மற்றும் உணவையும் சிக்கனமாக பயன்படுத்துமாறும் அவர் மக்களிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, இன்னும் சில நாட்களில் நாட்டில் நிலவும் வறட்சி மற்றும் குளிரான கால நிலையில் தற்காலிகமாக மாற்றம்ஏற்படும்எனஎதிர்பார்ப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டின் பெரும்பாலானபகுதிகளில்மழையுடன் கூடிய காலநிலை நிலவும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின்சில பகுதிகளில்காலைவேளையில்பனியுடன் கூடிய காலநிலை நிலவலாம்எனவும்வானிலைஅவதான நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 2012 வெலிக்கடைப் படுகொலை விசாரிக்குமாறு கோரி முறைப்பாடு

2012ம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகளை விசாரிக்குமாறு கசுன் புசுவெல்ல என்ற ஊடகவியலாளர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையில் கடமையாற்றும் இவர் தன்னிடம் வீடியோ புகைப்பட ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் இவர் செய்த முறைப்பாட்டிற்கமைய கடந்த வாரம் மனித உரிமை ஆணைக்குழு இவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளது.

கடந்த வருடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி விமல் நம்புவசம், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் அசோகா விஜயதிலக, ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கே.லியனகே ஆகியோர் கொண்ட குழுவொன்றை இது விடயம் குறித்து விசாரிப்பதற்கு நியமித்திருந்தார் எனினும்இந்தகுழுவின்அறிக்கை இதுவரைவெளியிடப்படவில்லை.

இப்போது கசுன் புசுவெலவின் முறைப்பாடு விசாரிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. 21012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற கலவரத்தில் 27 பேர் மரணமடைந்ததுடன் 40 பேர் காயமடைந்திருந்தனர். இந்த கலவரத்தில் இருபத்தேழு நிமிடத்தில் பதினொரு பேர் மரணமடைந்தனர் கூறப்படுகிறது.

# ஓமந்தைச் சாவடி அமைந்திருந்த காணி நேற்று விடுவிக்கப்பட்டது

## வவுனியா அரச அதிபரிடம் படையினரால் கையளிப்பு



வவுனியா, ஜன.18

வவுனியா – ஓமந்தைச் சோதனைச்சாவடி அமைந்திருந்த தனியாரின் காணி இராணுவத்தால் நேற்று விடுவிக்கப்பட்டு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமாரவிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த யுத்த காலத்தில் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து வடக்கில் இருந்து தெற்கிற்கும், தெற்கில் இருந்து வடக்கிற்குமான நுழைவாயிலாக இந்தச் சோதனைச் சாவடிவிளங்கியது. போக்குவரத்துச் செய்யும் மக்களையும் தெற்கிற்கும் வடக்கிற்கும் கொண்டு செல்லப்படும் பொருட்களையும் சோதனையிடும் பிரதான சோதனைச் சாவடியாகவும் இந்த இடமே இருந்தது.

இந்தச் சோதனைச் சாவடிக்காக சுமார் 60 பேருக்குச் சொந்தமான 24 ஏக்கர் காணியைப் படையினர் பயன்படுத்தினர்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர்தமதுகாணிகளைவிடுவித்து தாங்கள் மீள் குடியேற உதவுங்கள் என அந்தக் காணிகளின் சொந்தக்காரர்கள் அரச அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனால் முதலில் 22 ஏக்கர் காணியை விடுவித்த படைத்தரப்பு எஞ்சிய 2 ஏக்கர் காணியைத் தொடர்ந்தும் தக்கவைத்திருந்தனர். அந்தக் காணியும் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இக் கையளிப்பு நிகழ்வில் பிரதேச செயலாளர் கா.உதயராசா, அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம-100)

# சில்லாலை யோசவ்வாஸ் யாத்திரை திருத்தலத்திற்கு அடிக்கல் நாட்டல்

சில்லாலை, ஜன.18

சில்லாலையில் தூய யோசவ்வாஸ் யாத்திரைத் திருத்தலத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது. யாழ். ஆயர் மேதகு கலாநிதியஸ்ரின்பேணாட்ஞானப்பிரகாசம் ஆண்டகை அடிக்கல் நாட்டிவைத்தார் .

இந்த தலம் அமைப்பது தொடர்பில்யாழ். மறைமாவட்டம் குழு அமைத்து ஆலோசனை மேற்கொண்டதற்கு அமைவாக அதனைச் சில்லாலையில் அமைப்பது என்ற தீர்மானத்தை எடுத்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்ற அருட்பணி அகஸ்ரின் அடிகளார் யாத்திரைத் தலத்திற்கான பணியை வேகப்படுத்தியதன் காரணமாக அடிக்கல் நாட்டப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தூய யோசவ்வாஸ் சில்லாலையில் 06.06.1687 முதல் 25.12.1689 வரை இருந்து சேவைசெய்துள்ளார். இதற்கு அமைவாகவே இங்கு யாத்திரைத்தலம் அமைவது பொருத்தம் என்பதால் ஆலயம் அமைக்கப்படவுள்ளது.

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் தூய யோசவ்வாஸ் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டு 2015 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

யாத்திரைத் தலத்திற்கான தூய யோசவ்வாஸ் திருச்சொரூ தூய கதிரை அன்னை ஆலயத்தில் இருந்து பங்குத் தந்தை அருட்பணி அகஸ்ரின் அடிகளார் தலைமையில் பவனியாக புதிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட் பணி ஜெபரட்ணம் அடிகளாரால் நற்கருணை வழிபாட்டும் திருப் பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

இதேவேளை தூய யோசவ்வாசின் வாழ்க்கை வரலாறு அடங்கிய அருங்காட்சியகம் தூய கதிரைமாதா ஆலயத்தில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுரட்ணம் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் தூய யோசவ்வாசின் வாழ்க்கை வரலாறு தொடர்பான அருங்காட்சியகம் சில்லாலையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ம)






காலைக்கதிர்
Kalaikkathir

# மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 98 ஆண்டு பழமையான புகைப்படம்!





Mr. C. SUBRAMANIA BHARATI
LECTURES ON
"THE CULT OF THE ETERNAL"
Being a scientific exposition of the Art of Conquering Death
On Sunday, the 2nd March, at 6-30 p.m.
AT THE
VICTORIA PUBLIC HALL
IN ENGLISH
Dr. S. Subramania Iyer Presides
Admission will be only by Tickets costing 1 Rupee each
Tickets can be had at
89, Ramasamy Street, G. T., at the Stores of India, Ltd. 16, Esplanade and at 23, Pycrofts Road, Triplicane.
K. AMRITA, Secretary.

ஆங்கிலேய ஆட்சியில் அடிமைப்பட்டு கிடந்தவர்களை தனது புரட்சிகரமான கவிதைகளால் தட்டி எழுப்பியவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

மக்களிடையே விடுதலை வேட்கையை தூண்டிய பாரதியாரின் 98 ஆண்டு கால பழமையான புகைப்படம் ஒன்று தற்போது கிடைத்துள்ளது.

புதுடெல்லியில் கிடைத்த இந்தப் புகைப்படத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையின் பேராசிரியர் மணிகண்டன் நேற்று முன்தினம் சென்னையில் நடந்த ஒரு விழாவில் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் மதராஸ் மாகாணத்தின் விக்டோரியா ஹாலில் 2.3.1919 அன்று நடந்த கருத்தரங்கில் பாரதியார் பேச வந்த போது இந்த புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

தலையில் முண்டாசு கட்டி, முறுக்கு மீசையுடன் கம்பீரமாக தோற்றமளிக்கும் இந்த பழமையான புகைப்படத்தையும் சேர்த்து பாரதியாரின் அசல் புகைப்படங்களின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

## வன்னியிலிரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகோட்டி ஒருவருக்கு நாற்பதாயிரம் ரூபா பணத்தைக் கொடுத்து சட்டவிரோதமான முறையில் தமிழகக் கரையைச் சென்றடைந்த அவர் அங்கு கரையில் இறங்கி உள்ளே நுழையும் போது கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடல் பகுதிக்கு வந்து இறங்கிய இந்த நபரைக் கைது செய்த இந்தியப் பாதுகாப்புத்துறையினர் அவரிடம் விடிய விடியத் தீவிர விசாரணைகளை நடத்தினர்.

தனுஷ்கோடி அருகே முதலாம் மணல்திட்டில் நபர் ஒருவரை இலங்கைப் படகு ஒன்று இறக்கி விட்டுச் சென்றதாகப் பாதுகாப்புத் துறையினருக்கு நேற்றுத்தகவல்கள்கிடைத்தன.

இதனையடுத்து சுங்கத் துறையினர், கடலோரக்காவல் படையினர் மற்றும் மத்திய புலனாய்வுத்துறையினர் அங்கு சென்று குறித்த நபரைக் கைது செய்து தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர்.

குறித்த நபர் வவுனியா பகுதியைச் சேர்ந்த ரோபர்ட் சுமன் (வயது 23) எனத்தெரியவந்துள்ளது. மேலும், இவரின் தாயார் லண்டனில் வசித்து வருகின்றார் எனவும், சென்னையில் 12ஆம் வகுப்பு வரை படித்து விட்டு மேற்படிப்பிற்காக இவர் லண்டன் சென்றுள்ளார் என்றும் கூறப்பட்டது.

இவர் கடந்த நவம்பர் மாதம் பாஸ்போர்ட் மூலம் இலங்கை சென்றார் எனவும், நேற்று முன்தினம் பகல் இலங்கைப் படகில் தனுஷ்கோடிக்கு வந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

இவரின் குடும்பம் கோயம்புத்தூரில் வசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து கடவுச்சீட்டு இன்றி சட்டவிரோதமாக இந்தியா வந்தார் என இவர் மீது தனுஷ்கோடிப் பொலிஸார் வழக்குப்பதிவுசெய்துள்ளனர்.

மேலும் இவரின் பின்னணி குறித்தும் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கப்பட்டது.

எல்லை நிர்ணய மேன்முறையீட்டு குழுவின் இறுதி அறிக்கையை கடந்த 2 ஆம் திகதியே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ் தபாவிடம் கையளிப்பதாக குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்திருந்தார். இருந்த போதிலும் ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஐ.தே.க. பிரதிநிதி அதில் கையொப்பமிட் டிருக்கவில்லை என்பதால் அது பிற்போடப்பட்டிருந்தது.

தற்போது கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள சில எழுத்தாக்கத் தவறுகள் திருத்தப்பட்டதும் அது விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

எல்லை நிர்ணயம் தொடர்பான அறிவிப்பு வர்த்தமானியில் பிரசுரமானால் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு இருந்த செயல் தடைகள் நீங்கி விடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஜெனீவா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நல்லிணக்கச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் குழு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றப் பொறி முறையைக் கோரும் பரிந்துரை தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை அரசு கலப்பு நீதிமன்றப்பொறிமுறையையும் பன்னாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கத்தையும் ஏற்க மறுப்பது தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல்ஹுசைன், "இலங்கை அரசு தான் இணை அனுசரணை வழங்கி 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ஐ.நா. அந்த நிலைப்பாட்டில் இப்போதும் உறுதியாக இருக்கின்றது. அதிலிருந்து ஐ.நா. ஒரு போதும் பின்வாங்காது." - என்று உறுதியளித்தார் எனக் கூறப்பட்டது. (உ)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் சமர்ப்பித்த அறிக்கையில் மனித உரிமை மீறல்வழக்குகளை விசாரிப்பதற்கு ஒவ்வொரு வழக்குக்கும் குறைந்தது ஒரு வெளிநாட்டு நீதிபதியையாவது நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஆயர் மேதகு கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை, வெளிநாட்டு நீதிபதிகளின் இருப்பு தேவையானது - இலங்கையில் போர்க் காலக் குற்றங்களுக்குச் சாட்சி சொல்பவர்கள் அச்சுறுத்தப் படுகின்றனர் - என்றார்.

விசாரணையின் போது இலங்கை நீதிபதிகள் இருந்தால் உள்ளூர் அதிகாரிகள் அவர்களை வசப்படுத்தித் தங்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றால் போல் அறிக்கைகளை எழுத வைப்பார்கள் எனவும் ஆயர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சு.கவோ அல்லது வேறு யாருமோ அத்தகைய நிலைப்பாட்டை எடுக்கலாம். ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமும் ஒற்றையாட்சி பற்றியே பேசுகின்றது. அதனால்தான் ஒரு பொதுவான நிலைப்பாட்டைக் காண நாம் முனைகின்றோம்.

சு.க. அமைச்சர்களைப் பொறுத்தவரையில் அவர்களில் பெரும்பாலானோர் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை எதிர்த்தவர்கள். நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் செனிவிரத்ன, எஸ்.பி. திஸநாயக்கா, அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த போன்ற சிரேஷ்ட அமைச்சர்கள் எப்போதுமே ஆரம்பத்தில் இருந்தே இந்த யோசனையையும், மைத் திரிபால சிறிசேனவையும் எதிர்த்தவர்களே. அவர்கள் அனைவரும் மஹிந்த ராஜபக்ஷ வுடன் சேர்த்துத் தோற்கடிக்கப்பட்டனர். எனவே, இப்போது அரசு என்ன செய்ய வேண்டும் என்று நிபந்தனை போடும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. ஜனாதிபதி சிறிசேன வென்ற பின்னர்தான் அவர்கள் வந்து அவருடன் சேர்ந்து கொண்டார்கள். அதன்படி மைத்திரிபால சிறி சேனவுக்கு மக்கள் வழங்கிய ஆணையையும் தீர்வையும் ஏற்றுத்தான் அவர்கள் அரசுக்கு வந்திருக்கின்றார்கள். ஆகவே, தேர்தலில் தோற்றுப்போன தங்களின் பழைய கொள்கைகளை அவர்கள் முன்நிறுத்த முடியாது. அப்படிச் செய்வதாயின் அவர்கள் எதிர்க்கட்சியில்தான் போய் இருக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான விசேட ஆணையையே மக்கள் வழங்கியுள்ளார்கள். உண்மையில், ஜனாதிபதித் தேர்தலில் அவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் அவர் வழங்கிய முதல் வாக்குறுதியும் அதுதான். தான் மீண்டும் (ஜனாதிபதித் தேர்தலில்) போட்டியிடமாட்டேன் என்றுதான் அவர் திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளார். மக்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதி அதுதான். அந்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

ஆகவே, அந்தச் சமயத்தில் அவரை எதிர்த்தவர்கள் இப்போது வந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கக் கூடாது என்றோ, அவர் (மைத்திரி) திரும்பவும் அத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றோ கூறமுடியாது. அப்படிக் கூறும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. - என்றார்.

## இளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றெடுத்தார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு 11.28



மணிக்கு சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகள் பிறந்தன.

ஊர்காவற்றுறை பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த வசீகரன் காயத்திரி (வயது32) என்பவருக்கே இரு ஆண் குழந்தைகளும் ஒன்று பெண் குழந்தையுமாக மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன.

மகப்பேற்று நிபுணர் கே. சுரேஸ்குமார் தலைமையிலான குழுவினரே சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர்.

குழந்தைகள் முறையே ஒரு கிலோ 900 கிராம், ஒரு கிலோ 560 கிராம், 2 கிலோ 100 கிராம் என்ற நிறையுடன் பிறந்தன.

மூன்று குழந்தைகளும் தாயும் ஆரோக்கியமாக இருக்கின்றனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னரும் இதேபோன்று ஒரே சூலில் மூன்று குழந்தைகள் சத்திரசிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்டன. அந்த சத்திரசிகிச்சையையும் மேற்படி மகப்பேற்று வைத்திய நிபுணரே மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## சிங்களவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில் -

புதிய அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தின் முன்வரைவு இந்த வருடம் முன்வைக்கப்படும் என்று அரசாங்கத்தால் கூறப்பட்டிருந்தாலும் இதுவரை அது முன்வைக்கப்படவில்லை.

6 உப குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு கடந்த 10,11,12ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுக்கப்பட இருந்தது. இருப்பினும் அரசியல் அழுத்தங்கள், சிங்களத் தலைவர்களுடைய அதிவேகமான இனவாதக் கருத்துக்களால் அந்த விவாதங்கள் கூட முடக்கப்பட்டன.

ஜனாதிபதி கூட சமஷ்டி என்ற சொல்லுக்கே இடமில்லை என்று கூறுகின்றார். பௌத்தமதத்திற்கு ஒரு அங்குலம் கூட விட்டுக் கொடுக்காமல், பௌத்த மேலாதிக்கத்தோடு இருப்போம் என்ற செய்தியை அவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.

பௌத்தம் தான் முதன்மை, பௌத்த மேலதிக்கம்தான் தேவை, வடக்கு, கிழக்கு இணைப்பில்லை என்ற நிகழ்சி நிரலில் தான் அரசாங்கம் தன்னுடைய செயற்பாடுகளைக் கொண்டுவருமாக இருந்தால், 13இற்குள் தான் தீர்வு என்றால், அது இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் எமக்கு தந்த ஆணையின் பிரகாரமே எங்களுடைய நல்லெண்ணங்களை நாம் அவர்களுக்கு வெளிப் படுத்தி வருகின்றோம். முழுமையான நல்லெண்ணத்தை கொடுத்திருக்கின்றோம்.

ராஜித சேனாரட்ன 2018 இற்குள் தீர்வு என்று கூறுகின்றார். இன்னுமொரு அமைச்சர் 2019 இற்குள் தீர்வு என்பார். இப்படியே ஒவ்வொருவரும் ஆண்டுகளை சொல்லி, காலங்களை இழுத்தடிக்கவே முற்படுகின்றனர். தவிர, தமிழர்களுக்கு தீர்வு தரும் எண்ணம் அவர்களிடம் இல்லை.

தமிழர்களைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு இணைந்த தாயக மண்ணில், இறைமையின் அடிப்படையில் தீர்வு முன்வைக்காத பட்சத்தில், அவர்கள் தமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள சர்வதேச அங்கீகாரத்துடன் முழு முயற்சிகளையும் மேற்கொள்வர்.

தீர்வு விடயத்தில் அரசு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தாவிடில், சிங்களவர்களோடு தமிழர்கள் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலைப்பாட்டில்தான் தமிழர்கள் இருக்கின்றாரகள்.

பிரச்சினைக்குரியவர்கள் தான் தங்களுக்கான தீர்வினை முன்வைக்க வேண்டும். யார் பிரச்சினையை கொடுத்தவர்களோ, யார் துன்பங்களைக் கொடுத்தார்களோ, யார் எங்களை அடக்கி ஆண்டார்களோ, அவர்கள் தீர்வு சொன்னால் அது உரிய தீர்வாக அமையாது.

பிரச்சினையால் பாதிக்கப்பட்டவன், இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டவன்தான் தனக்கு வேண்டிய தீர்வினைக் கேட்பதற்கு உரிமை உடையவன். அதனை இந்த அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலை, நில விடுவிப்பு தொடர்பில் எமக்கு தந்தவாக்குறுதிகளை அரசாங்கம் மீறியுள்ளது. குறிப்பாகப் பொருத்து வீட்டைக் கொண்டு வந்து தமிழர்களை யும் தமிழ் தேசியக்கூட்டமைப்பையும் பிரிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

மேலும், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் வடக்கு மாகாண சபையை இயங்கவிடாமல் அரசாங்கம் முடக்குகின்றது. இவற்றை வைத்து பார்க்கும் போது பிரச்சினையை தீர்க்காமல் மேலும் வெவ்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்கு அரசு முனைப்புக்காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் நடத்தப்பட்ட பேச்சுகளிலும் அப்போது இருந்த அரசாங்கம் பயன்படுத்திய யுத்திகளையே தற்போதைய அரசாங்கமும் கையாண்டு வருகின்றது. தீர்வினை முன்வைக்காமல் காலத்தை இழுத்தடிக்கும் முழு முயற்சியில் தான் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதில், நாங்கள் தோற்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திரத் தோல்வியை அடைந்திருக்கின்றது என்பது தான் உண்மை. நாங்கள் தோல்வியை எதிர்கொள்ள முடியாது. வெல்லுவதற்கான முழு முயற்சிகளையும்மேற்கொள்கின்றோம். - என்றார். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.